பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 16 செவ்வாய்க்கிழமை (01.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 246

## இராணுவ பஸ் கிளைமோரில் சிதறியது சேருநுவரவில் 18 படையினர் பலி!

கொழும்பு,ஓக.01

திருகோணமலை சேருநுவர கிராமத்துக்கு அருகே, கந்தளாய் - சேருநுவர வீதியில் நேற்றிரவு இராணுவத்தினரை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானதில் 18 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்; ஒருவர் காயமடைந்தார்.

நேற்றிரவு 10.30 மணியுளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. கந்தளாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸே கிளைமோரில் சிக்கிச் சிதறியது என்று கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு நேற்று நள்ளிரவு மேலதிக படையினர் அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கு இராணுவத்தினர் நள்ளிரவுக்குப் பின்னர் - இன்று அதிகாலை பெரும் தேடுதலை நடத்தினர் என்று அறியமுடிந்தது.

## ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறியது

கொழும்பு,ஓக.1

களுத்துறையிலுள்ள இலங்கை சிறப்பு அதிரடிப்படையினரின் ஆயுதக் களஞ்சியம் ஒன்று நேற்று நள்ளிரவு வெடித்துச் சிதறியது.

நள்ளிரவு 11.30 மணியளவில் இந்த ஆயுதக்களஞ்சியம் திடீரென பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியது என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், இந்த அனர்த்தத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

இந்த ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறிய தகவலை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க உறுதிப்படுத்தினார் என்று 'தமிழ் நெற்' இணையத்தளம் இன்று அதிகாலை செய்தி வெளியிட்டது. (க)

### 12 சிப்பாய்களும், 3 போராளிகளும் சாவு

# மாவிலாறு எல்லையில் மூண்டது பெருஞ் சமர்!

## வான், தரை வழித் தாக்குதல்களோடு மும்முனைகளில் படை நகர்வு முயற்சி

கொழும்பு, ஓகஸ்ட் 1

**திருகோணமலை மாவட்டம் மாவிலாறு எல்லைப் பிரதேசத்தில் அரசுப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பெருஞ்சமர் நேற்று மூண்டது.**

**உக்கிரமான தரை, வான் வழித் தாக்குதல்களோடு மூன்று முனைகளில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் முன்னேற முயன்ற அரச படையினருடன் புலிகள் கடுமையான யுத்தத்தில் ஈடுபட்டனர் எனப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.**

**'மிஷன் வோட்டர் செட்' என்று பெயரிட்டு இராணுவத்தினர் ஆரம்பித்த இந்த படை நடவடிக்கையில் நேற்று மாலை வரையான சம [illegible] அதிகாரிகள் இருவர் உட்பட பன்னிரண்டு படையினர் பலியாகினர் என்றும் -பெரும் எண்ணிக்கையான படையினர் காயமடைந்தனர் என்றும் - கூறப்பட்டது. விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் சாவடைந்தனர், மற்றும் மூவர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.**

திருகோணமலை மாவட்டம் வெருகல் பகுதியில் உள்ள மாவிலாற்றின் கால்வாய்க் கதவுகளைத் திறந்துவிடும் இலக்கோடு, அங்குள்ள எல்லைப்புறப் பிரதேசத்திலிருந்து அரசுப் படைகள் புலிகளின் பகுதிக்குள் நுழைய முயன்றமையை அடுத்தே நேற்று அங்கு பெருஞ்சமர் மூண்டது.

விடுதலைப் புலிகள் தரப்பின் செய்திகளின்படி -

திருமங்களபுரம் இராணுவ முகாமிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள அங்கொடைப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற படை அணி மீது வல்கொட்டு என்ற இடத்தில் வைத்து வழிமறிப்புத் தாக்குதல் தொடுத்து படை முன்னேற்றத்தைப் புலிகள் தடுத்து நிறுத்தினர்.

அதேசமயம், கல்லாறு இராணுவ முகாமிலிருந்து கிழக்குத் திசையில் ஈச்சிலம்பற்று நோக்கி எடுக்கப்பட்ட படை நகர்வும் முறிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவிலாறு படைநகர்வுக்கு தளபதியாக மல்லவராச்சி

திருகோணமலை, ஓக.1

திருகோணமலை, சேருவில - கல்லாறு இராணுவ முகாமிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்ற படையினருக்கு இராணுவத்தின் சிரேஷ்ட தளபதி நந்த மல்லவராச்சி நேரடியாக நின்று தலைமை வகிக்கிறார் என்று படை வட்டாரங்கள் தக

(16ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு,ஓக. 1

எரிபொருள் விலை நேற்று நள்ளிரவு முதல் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பெற்றோல், டீசல் என்பவற்றின் விலைகளே இவ்வாறு அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சின் தகவல் தெரிவிக்கின்றன.

பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவினாலும், டீசல் 5 ரூபாவினாலும் அதிகரிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவில் முன்னரங்கில் இருதரப்பும் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ்ப்பாணம், நாகர்கோவில் இராணுவத் தளத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீதும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக் குடிமனைகள் மீதும் நேற்றுக் காலை படையினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதிகாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரைக்கும் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் அங்கிருந்து பதிலுக்குப் புலிகளும் தமது பகுதியிலிருந்து படையினரின் நாகர்கோவில் நிலைகள் மீது ஷெல் தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் படையினர் சூடு நேற்று ஒருவர் உயிரிழப்பு

### புலி உறுப்பினர் என்கிறது இராணுவம்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ்.நகரில் துரையப்பா விளையாட்டரங்குப் பகுதியில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நேற்றுப் பிற்பகல் ஒருவர் உயிரிழந்தார்.

விளையாட்டரங்குப் பகுதியில் பிற்பகல் 1.45 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது கிரனேட் வீசப்பட்டதாகவும் இதனையடுத்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனவும் படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. இத்துப்பாக்கிப் பிரயோகத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். கொல்லப்பட்டவர் யாரென நேற்று இரவுவரை இனங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தலையற்ற முண்டமாக இளைஞன் சடலம் மீட்பு

### சிறுப்பிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.1

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காணாமற்போன இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். தலையற்ற நிலையில் முண்டம் மட்டுமே சிறுப்பிட்டி அம்மன் கோயில் அருகிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிறுப்பிட்டியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரின் மகனான விஸ்வலிங்கம் கௌதீபன் (வயது 26) என்பவரே இவ்வாறு தலைவெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு, எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் அவர் காணாமற்போயுள்ளார். அது

(16ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டு மாணவர்கள் நேற்று பூரண பாடசாலை பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.1

கடந்த வியாழக்கிழமை யாழ்.காங்கேசன் துறை வீதியில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களால் யாழ். இந்துக் கல்லூரி உப அதிபர் எஸ். கிருஷ்ணகுமார் காயமடைந்த சம்பவத்தைக் கண்டித்து நேற்று குடாநாட்டின் பாடசாலை மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பாடசாலைகளில் மாணவர் வரவு இல்லாததால் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

கடந்த வியாழக்கிழமை யாழ்.காங்கேசன்துறை வீதியில் படையினரை இலக்குவைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. அதையடுத்து படையினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அவ்வேளையில் வீதியால் சென்று கொண்டிருந்த யாழ். இந்துக் கல்லூரி உப அதிபர் உட்பட 4 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் நேற்றுப் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறு மாணவர்களுக்கு யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந்தது.

இதனையடுத்து நேற்று குடாநாட்டு மாணவர்கள் பூரண வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். (15-51-70-139-202)

## மன்னாரில் கிளைமோர் படை அதிகாரி காயம்

மன்னார், ஓக.1

மன்னார், நானாட்டானில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் படுகாயம் அடைந்தார்.

அதிகாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. படுகாயமடைந்த இராணுவ அதிகாரி அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியைப் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். (க)

# விமானத் தாக்குதல்கள் நிற்கும்வரை கண்காணிப்புப் பணி இடைநிறுத்தம்

### குழுவின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.1

அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை போர் நடைபெறும் இடங்களில் தமது கண்காணிப்புப் பணியை இடைநிறுத்தியுள்ளதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.

விமானத் தாக்குதல்கள் மற்றும் ஏனைய படை நகர்வுகளுக்கும் தாக்குதல்களுக்கும் மத்தியில் கண்காணிப்பாளர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளமையினாலேயே இவ்வாறானதொரு முடிவை கண்காணிப்புக் குழு எடுத்துள்ளது என்று அதன் பேச்சாளர் தொபு.:ப்பினூர் ஓமர்சன் கொழும்பு நாளேடு ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இரு தரப்பிற்கும் இடையில் தாக்குதல்கள் நடைபெறும்போது அங்கு கண்காணிப்பாளர்கள் தமது பணியை முன்னெடுப்பதென்பது அவர்களுடைய உயிருக்கும் ஆபத்தானதாக அமையலாம். ஆகவே, சர்வதேச கண்காணிப்பாளர்களின் பாதுகாப்புக் கருதி போர் நடக்கும் இடங்களில் குழு தனது பணியை முன்னெடுக்காது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு தமது கண்காணிப்புப் பணிகள் அனைத்தையும் நிறுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம)

# உயிரிழந்த போராளிகளின் வித்துடல்கள் விதைப்பு

மட்டக்களப்பு, ஓக.1

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் 'தேனகம்' விடுதி மீது கடந்த சனிக்கிழமை 'கிபிர்' விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் உயிரிழந்த போராளிகள் எட்டுப் பேரினதும் வித்துடல்கள் நேற்றுமுன்தினம் மாலை புலிகளின் மாவீரர் துயிலும் இல்லங்களில் விதைக்கப்பட்டன.

கப்டன் செஞ்சுடர், கப்டன் ஊரவன், இரண்டாம் லெப்டினன்ட் சுஜீவன் ஆகியோரின் வித்துடல்கள் புலிபாய்ந்தகல் மாவீரர் துயிலும் இல்லத்திலும் -

லெப்டினன்ட் கேணல் தமிழ்ச்செல்வன் மாமா, மேஜர் அரிகரன், மேஜர் கவி ஆகியோரின் வித்துடல்கள் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்திலும் விதைக்கப்பட்டன.

இவர்களின் இறுதி வணக்க நிகழ்வில் புலிகளின் முக்கிய தளபதிகளான கேணல் பானு, கேணல் ஜெயம் ஆகியோர் பங்கேற்றனர். (க)

# கடைகளின் பெயர்ப் பலகைகளை அகற்றும்படி சீருடையினர் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக. 1

கடைகளின் முன்னாள் வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பலகைகளை அகற்றும் நடவடிக்கைகளில் குடாநாட்டு வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளனர். அவற்றை அகற்றும்படி சீருடையினர் விடுத்த பணிப்பைத் தொடர்ந்தே அவை அகற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் சுன்னாகம், மருதனார்மடம், இணுவில் பகுதிகளில் உள்ள கடைகளின் பெயர் பலகைகளை அகற்றும்படி விடுக்கப்பட்ட பணிப்பை அடுத்து வர்த்தக நிலையங்களில் இருக்கும் பெயர்ப் பலகைகள் அகற்றப்பட்டும் உள்ளன.

இதேபோன்று யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளிலும் தற்போது வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகளையும் அகற்றும்படி சீருடையினரால் உத்தரவிடப்பட்டுள்ளது. இவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக பிரதான வீதிகள் தவிர்ந்து உள்புற வீதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகளையும் அகற்றும்படி நல்லூர் பகுதியில் பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மையில் யாழ்.நகரில் காங்கேசன்துறை வீதியில் வர்த்தக நிலையப் பெயர்ப் பலகைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் கிளைமோர் வெடித்த சம்பவத்தைத் தொடர்ந்தே சீருடையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம)

# சிங்கள இளைஞர்கள் இருவர் திருமலையில் சுட்டுக்கொலை

கொழும்பு, ஓக.1

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில் சிங்கள இளைஞர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் 32 வயதுடைய சிங்கள இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திருமலை நெல்சன்புரவில் உள்ள மின்சாரப் பொறியியலாளர் அலுவலகத்துக்குச் சமீபமாக 'லவ் லேன்' என்ற பகுதியில் வைத்து இவர் சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஓட்டோ சாரதியான லக்ஷ்மன் சுசந்த என்பவரே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

திருமலை செல்வநாயகபுரம் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் லியனகே (வயது-22) என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார். லொறிச் சாரதியான இவர் செல்வநாயகபுரம் பகுதியிலுள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றுக்கு அருகில் தமது லொறியை நிறுத்தியபோது இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் இவரைச் சுட்டுவிட்டுச் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் சுடப்பட்ட சமயம் இவரது லொறியின் உரிமையாளரும் அருகில் இருந்தார் என்று கூறப்பட்டது. இந்தக் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (க)

# படைத்தளபதி சரத் பொன்சேகா கடமைகளைப் பொறுப்பேற்றார்

கொழும்பு, ஓக.1

தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் படுகாயமுற்று சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று மீண்டும் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கடந்த ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கடும் காயமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் இவர் மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றார். சமீபத்தில் நாடு திரும்பிய அவர் நேற்று மீண்டும் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கடமைகளைப் பொறுப்பேற்ற கையோடு தற்போதைய பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பாக அவர் படை அதிகாரிகளோடு கலந்துரையாடினார். (க)

### இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி ஆராய

# அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் மீண்டும் கூடும்

கொழும்பு, ஓக.1

அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் மூன்றாவது கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை - ஓகஸ்ட் 8ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 20ஆம் திகதி நடைபெற்ற மேற்படி குழுவின் இரண்டாவது கூட்டத்தில் மூன்றாம் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று குறித்து முடிவாகியதாக சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பேச்சுகளில் கலந்துகொள்ளும் தரப்பினரை இனங்கண்டு முடிவுசெய்தல், அதிகாரத்தை எந்த வடிவில், எந்த அளவில் பகிர்வு செய்வது என்பதனைத் தீர்மானித்தல், இறுதிமுடிவு எட்டப்படும் வரையான இடைக்கால ஏற்பாடுகள் குறித்து இணக்கம் காணுதல் என்பனவே மூன்றாம் நிகழ்ச்சித் திட்டம் என்று மேலும் அவர் தெரிவித்தார். அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் முதலாவது கூட்டம் ஜூலை 11ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது. இக்குழுவினை ஐக்கிய தேசியக்கட்சி பகிஷ்கரிப்புச் செய்து வருவதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆழிப் பேரலை பாதித்த உள்ளூராட்சி சபைகளுக்கு கணனி இயந்திரங்கள்

யாழ்ப்பாணம்,ஓக. 1

ஆழிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கு தலா இரண்டு கணனி இயந்திரங்களும் தலா ஒரு போட்டோ பிரதி இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவனத்தினர், மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஊடாக இப்பொருள்களை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (204-117)

# கட்டைப்பிராய் 3ஆம் கட்டையில் நேற்றுக் காலை கிளைமோர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ்.–பருத்தித்துறை வீதியில் கட்டைப்பிராய் மூன்றாம் கட்டைப்பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.40 மணியளவில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றது.

வீதிரோந்தில் ஈடுபட்ட படையினரை இலக்குவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இத்தாக்குதலின்போது சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து பருத்தித்துறை வீதிப் போக்குவரத்து இருபாலைச் சந்திக்கும், கல்வியங்காட்டுச் சந்திக்குமிடையே திசை திருப்பப்பட்டு இராச வீதியூடாக நடைபெற்றது. (க)

# சேருவில விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபா நட்டஈடு

### அரசு நேற்று அறிவிப்பு

திருகோணமலையில் மாவிலாறு அணை பூட்டப்பட்டதால் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அரசு அறிவித்திருக்கிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் நட்டஈடு வழங்க அரசு தீர்மானித்திருக்கிறது. மாவிலாறு அணை மூடப்பட்டதால் சிங்களப் பிரதேசமான சேருவில போன்ற பகுதிகளில் 30 ஆயிரம் ஹெக்டேயர் நெற்பயிர்கள் அழிவடைந்திருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நெல்வயல்கள் அழிவடைந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கே 25 ஆயிரம் ரூபா வீதம் நட்டஈடு வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. (க)

# ஹெலஉறுமய ஆர்ப்பாட்ட அணி அணைக்கட்டு திறக்கும்வரை திரும்பாது

திருகோணமலை, ஓக.1

மாவிலாறு அணைக்கட்டுத் திறக்கப்படும் வரை கொழும்பிலிருந்து வந்த தமது கட்சியைச் சேர்ந்த அணி திரும்பமாட்டாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் அத்தரேலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அணைக்கட்டைத் திறந்து விடுவதற்குத் தாம்நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துப் பத்து நாள்கள் கழிந்தும் அணையின் துரிசு இன்னும் பூட்டப்பட்டிருப்பதாகவும் -

பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு தண்ணீர் கிடைக்கும்வரை தம்முடன் கொழும்பில் இருந்து வந்த அணி திரும்பமாட்டாது என்றும் - தேரர் கூறினார்.

தம்முடன் வந்த அணி, சிங்களக் கிராமங்களைச் சேர்ந்த 3000 மக்களுடன் சேர்ந்து கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் அவர் சொன்னார்.

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# இராணுவ வழியில் அரசின் முனைப்பு மாவிலாறில் அது மீள நிரூபணம்

திருகோணமலை மாவட்டம் வெருகல் பகுதியில் உள்ள மாவிலாற்றின் கால்வாயைத் திறந்து விடும் சர்ச்சை 'ஈழம் போர் -04' இற்கு வாயில் கதவாக அமையும் ஆபத்து உருவாகியிருக்கின்றது.

ஏற்கனவே, நலிந்து, உடைந்து, சிதறிப் போகும் நிலையில் இருக்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டை மேலும் வலுவிழக்கச் செய்து, செல்லாக் காசாக்கும் நிகழ்வாக மாவிலாறு யுத்தக் களம் அமையப் போகிறது என்பது தெளிவாகின்றது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் எதிர்காலப் பங்கு, பணி சந்தேகத்துக்கும், கேள்விக்கும் உள்ளாகியிருக்கும் இச்சமயத்தில் -

"பெயரளவில்தான் யுத்த நிறுத்த உடன்பாடு; செயலளவில் அது எப்போதோ செத்துவிட்டது" - என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரே வேதனையும், விசனமும் தெரிவித்திருக்கும் தற்போதைய நிலையில் -

மாவிலாறு கால்வாய்ச் சர்ச்சை பெரும் இராணுவ மோதலுக்கு - நேரடிச் சமருக்கு - வழி செய்திருப்பது வேதனைக்குரியது.

மூதூர் கிழக்கு மற்றும் ஈச்சிலம்பற்றுப் பிரதேச மக்கள் தமது தண்ணீர், உணவு, பாதுகாப்பான போக்குவரத்து வசதி, நிவாரணம் மற்றும் விவசாய நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாகத் தொடர்ந்தும் எழுப்பி வந்த குரலை அரச நிர்வாகம் செவிமடுக்கத் தவறியதன் விளைவே இந்த மோசமான நிலைமை.

மஹிந்தபுர மற்றும் கட்டைபறிச்சான் இராணுவ முகாம்களுக்கு முன்னால் நான்கு தடவைகளுக்கு மேல் அமைதி வழியில் இப்பிரதேச மக்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் 'செவிடன் காதில் ஊதிய சங்காக' வீணான நிலைமையில்தான், கால்வாய்க் கதவுகளைப் பூட்டி, தண்ணீர் விநியோகத் தடை மூலம் தங்கள் கஷ்டங்கள், துன்ப துயரங்கள் போன்றவற்றை அரசுக்கு உரிய முறையில் - உறைப்பாக - உரைக்க முயலும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் அவர்கள்.

கால்வாய்த் தண்ணீர் விநியோகம் தடைப்பட்டதன் பின்னணியில் அப்பிரதேசத் தமிழ் மக்களுக்கு இருந்த ஆதங்கங்களைப் புரிந்துகொள்ள வழமைபோல மறுத்த - மறந்த - தென்னிலங்கைச் சிங்கள அரச நிர்வாகம், தண்ணீர் விநியோகம் தடைப்பட்டதால் சேருவில சிங்கள விவசாயிகளுக்கு ஏற்பட்ட இக்கட்டைப் பெரிதுபடுத்தி, சீற்ற முற்று, சீறி எழுந்து இராணுவ நட வடிக்கையை ஆரம்பித்திருக்கின்றது.

பௌத்த - சிங்கள மேலாண்மை வாதத்திலும், பேரினவாத சிந்தனையிலும் ஊறித் திளைத்த கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்றவற்றின் வாக்கு வங்கியாக அமைந்த பிரதேசம் சேருவில. அந்தப் பிரதேசத்தில் அக்கட்சியினர் காலூன்றி நின்று செய்யும் இன வெறித் திருகுதாளங்கள் சொல்லுக்கடங்கா. அந்தத் தரப்புகளுக்குப் பயந்து கொண்டு, தனது மேலாண்மை அதிகாரத்தை அப்பிரதேசத்தின் நலிவுற்ற தமிழ் மக்களின் மீது திணிப்பதன் மூலம் மேற்படி கட்சிகளைச் சேர்ந்தோரையும், அவர்களுக்கு ஆதரவாக அங்கு நிற்போரையும் தாஜா செய்து, சமாளிப்பதற்கு இராணுவவாதப் போக்கை - அதிகார வெறித்தனத்தை - அங்கு காட்ட முயல்கிறது மஹிந்தவின் அரசு.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை இராணுவ அடக்குமுறை மூலம் ஒடுக்கிக் காட்ட வேண்டும் என்ற அதிகாரத் தீவிரமும், திமிரும் உடைய இராணுவத் தளபதி மீண்டும் தமது பொறுப்புக்களை ஏற்ற கையோடு மாவிலாறில் யுத்த களம் திறக்கப்பட்டிருக்கின்றது.

இஸ்ரேலிய ஸியோனிஸவாதிகள் லெபனான் மீது ஓர் ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பித்திருக்கும் வேளை இது. இஸ்ரேலின் கண்மூடித்தனமான - அநாகரிகமான - மிருகத்தனமான - கொலை வெறிக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் அப்பாவிப் பொது மக்களின் உயிர்கள், உடைமைகள் கொடூரமான விதத்தில் காவு கொள்ளப்படுவதைப் பார்த்து சர்வதேச உலகமுமே அதிர்ச்சியில் உறைந்திருக்கும் சமயம் இது.

உலகின் கவனம் இஸ்ரேல் - லெபனான் எல்லையில் குவிந்திருக்க, இங்கு சத்தம் சந்தடியின்றி ஒரு யுத்த முனை திறக்கப்பட்டிருக்கின்றது.

இது வினையை விருந்து வைத்து, விரும்பி, வரவேற்கும் வேலையன்றி வேறில்லை.

பொது மக்களின் பிரச்சினையை ஒரு சிவில் அதிகாரியை நேரடியாக அனுப்பி, 24 மணி நேரத்துக்குள் தீர்த்து வைத்து, சுமுகமாக முடிப்பதற்கு வக்கற்ற அரச நிர்வாகம், யுத்தத்தை வருந்தி வரவழைக்கும் பணியை முன்னெடுக்கின்றது.

இலங்கையில் புரையோடிப் போய்க் கிடக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணும் முயற்சிகள் சீர்கெட்டுப் போயிருக்கும் இவ்வேளையில், அதை மேலும் சீரழிக்கும் நடவடிக்கையே மாவிலாறு கால்வாய்த் தண்ணீர்ப் பிரச்சினையை இராணுவ ரீதியில் கையாளும் அரசின் எத்தனமாகும்.

இது அமைதி முயற்சிகளை நிரந்தரமாக சீர்குலைக்கும் செயற்பாடு. மீண்டும் திருத்த முடியாத - பழைய நிலைக்குத் திரும்பிவர முடியாத - மோசமான - பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கையாகும். இதன் விளைவுகளையும், விபரீதங்களையும் புரியாமல் இந்த மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்திருக்கின்றது போலும் தென்னிலங்கைத் தலைமை.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை இராணுவ ரீதியில் கையாள முயலும் தன் வழமையான போக்கிலிருந்து தென்னிலங்கைச் சிங்களத் தலைமைகள் மாறவில்லை, மாறப்போவதில்லை என்பதற்கு இந்த நடவடிக்கை நல்லதோர் உதாரணம்.

இராணுவவாதச் செயற்பாடுகள் மூலம் கடந்த காலங்களில் பெற்ற பட்டறிவைத் திரும்பவும் பட்டுத் தெளிய மீண்டும் ஒரு முறை தயாராகிறது தென்னிலங்கைத் தலைமை. அவ்வளவே.

# புலிகளுடன் பேசிக்கொண்டிருந்தபோதே எமக்கு அருகில் குண்டுவீச்சு நடந்தது

## அரசின் தவறான அணுகுமுறைபற்றி கண்காணிப்புக்குழு கண்டனம்

கொழும்பு,ஓக.1

மாவிலாற்று நீர் விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் நாம் பேசிக்கொண்டிருந்த வேளையிலேயே இலங்கை விமானப்படை விமானங்கள் நாம் இருந்த இடத்துக்கு அருகிலேயே குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளன.

-இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் ரொய்டர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டி யொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாவிலாற்று பிரச்சினையை காரணம் காட்டி தரை மற்றும் வான் தாக்குதல்களை வலிந்து மேற்கொண்டிருப்பது தவறான அணுகுமுறையாகும் என்று அவர் கண்டித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் உல்ப் ஹென்றிக்சன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழர் வாழும் பகுதிகளில் படைகள் வலிந்து ஆரம்பித்துள்ள வான் தாக்குதல்கள் கொழும்பு நகரம் தாக்கப்படுவதற்கு வழி வகுக்கக்கூடும்.

போர்நிறுத்த உடன்படிக்கையினை இரு தரப்பினரும் அதிகாரபூர்வமாக விலகிக்கொள்ளாத நிலையில் அதனையே அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்பிருக்கின்றது. ஆனால், போர் நிறுத்தத்தில் இருந்து இரு தரப்பினரும் வெகுதூரம் சென்றுவிட்டார்கள். நீரைப் பெறுவதற்காக அரச படைகள் வலிந்து தாக்குதல்களை ஆரம்பித்திருப்பது தவறான வழியைப் பின்பற்றுவதாகும். நீரைப் பெறுவதில் உண்மையில் விருப்பம் கொண்டிருந்தால் இது பொருத்தமற்ற செயலாகும்.

நாங்கள் வெருகல் பகுதிக்குச் சென்று புலிகளுடன் பேச்சை மேற்கொண்டோம். அரசாங்கத்தின் அனுமதி இதற்கு பெறப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்குமாறு புலிகளை நாம் கேட்டுக்கொண்டோம். ஆனால், நாம் பேசிக்கொண்டிருந்த போதே விமானப்படையினர் எமக்கு அருகில் குண்டுகளை வீசினார்கள்.

முழு அளவிலான யுத்தத்தை ஆரம்பிக்கும் வல்லமை இரு தரப்பினருக்கும் இருப்பதாக நாம் நினைக்கவில்லை. இப்போதைய வன்செயல்களை மட்டுமே அதகரிக்கமுடியும். ஆனால் நிலைமையை அரசு கட்டுப்படுத்தத் தவறினால் கொழும்பில் தாக்குதல்கள் நடத்தப்படுவதை தடுக்க முடியாமல் போகலாம்.

- இவ்வாறு அவர் அந்தப் பேட்டியில் கூறியுள்ளார்.

(ப)

# மாயக்கைப் பகுதி குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் வழங்க விசேட திட்டம்

கரவெட்டி, ஓக.1

வடமராட்சி மாயக்கைப் பகுதியில் குழாய் மூலம் குடியிருப்புகளுக்கு நேரடியாக குடிதண்ணீர் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கரவெட்டி, துன்னாலை, அத்துளு, கிராய் போன்ற பகுதிகளில் குடிதண்ணீர் பெறுவதற்கு பொதுமக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்இப் பகுதிகளுக்கு அத்துளுக் குளத்திலிருந்து குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இதுவும் உவர் நீராக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இங்கிருந்து வீதியோரக்குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. ஆனால், இதன் மூலம் சீரான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளமுடியாதுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு விசேட குடிதண்ணீர் விநியோகத்தை மாதிரியாகச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் மற்றும் வடிகால் அமைப்பு சபையும் கரவெட்டிப் பிரதேச செயலகமும் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

மாயக்கையில் நன்னீர் ஊற்று கண்டு பிடிக்கப்பட்டு ஊற்றுத் தண்ணீர் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஆய்வு முடிவில் ஊற்றுத் தண்ணீர் தரமானது என்று தெரியவந்தால் கொழும்புப் பகுதியில் உள்ளது போன்று நேரடியாக வீடுகளுக்கே குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படும் என்று கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுப் பணிகளை குடிதண்ணீர் வடிகாலமைப்புச் சபை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (70)

# அத்துளுக்குளத்தைப் புனரமைக்க பிரதேச செயலர் கோரிக்கை

வடமராட்சி, ஓக.1

குடிதண்ணீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் கரவெட்டி அத்துளுக்குளத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரசஅதிபர் கே.கணேஷிடம் கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் கோரியுள்ளார்.

வெளிநாட்டு உதவியுடன் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் அத்துளு குளதில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கணிசமான பிரதேசத்திற்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக குளத்திலிருந்து பெருமளவு தண்ணீர் எடுக்கப்படுகிறது.

இதனால் அத்துளுக் குளத்து நீர் உவர் நீராக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இக்குளத்தின்கொள்ளளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும்படி பிரதேச செயலர் கோரியுள்ளார்.

இதேவேளை, இக்குளம் நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது கோரிக்கை அடங்கிய கடிதத்தை பிரதேச செயலாளர் சமீபத்தில் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார். (173)

# உள்ளூர் உற்பத்திகளை பயன்படுத்தி வன்னியில் போஷாக்குணவு தயாரிப்பு

கிளிநொச்சி, ஓக.1

வன்னிப் பிரதேசத்தில் உள்ளூர்உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்தி ஊட்டச் சத்துகள் நிறைந்த போஷாக்கு உணவு தயாரிக்கப்பட்டு 'பாம் போஷா' என்ற பெயரில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு பனை அபிவிருத்திச் சபையும் பசுமைப் புரட்சிக்கான நிறுவனமும் இணைந்து இத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

இந்த போஷாக்குணவை அறிமுகஞ்செய்யும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்றது.

இந்த உணவு கூடிய போஷாக்கு உடையதாகவும் - பயறு, கௌபி, ஒடியல், உழுந்து, அரிசி, எள், சீனி போன்ற உணவுப் பொருள் சேர்க்கப்பட்டு இந்த போஷாக்குணவு தயாரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த போஷாக்குணவு உள்ளூர் உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுவதால் உள்ளூர் விவசாயிகள் நன்மையடைவர் என்று - போஷாக்குக் குறைபாடு உள்ள சிறார்கள் மற்றும் மாணவர்களுக்கு ஊட்டச் சத்து நிறைந்த உணவாக அமையும் என்றும் கருதப்படுகிறது.

(203)

# விளையாட்டு உபகரணங்கள் மீளப் பெறப்பட்டன

குருநகர்,ஓக.1

அனலைதீவில் உள்ள சனசமூக நிலையத்திற்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று விளையாட்டு உபகரணங்களை வழங்கியது. ஆனால், தற்போது அந்த விளையாட்டு உபகரணங்களை அந் நிறுவனம் மீளப்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. அவை தவறுதலாக இங்கு வழங்கப்பட்டுவிட்டதாக காரணம் கூறப்பட்டுள்ளது. மீளப் பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் வேறு சனசமூக நிலையத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன என்று அறியமுடிகிறது.

இவ் விளையாட்டு உபகரணங்களை இது வரை பயன்படுத்திய சனசமூக நிலையத்தினர் இது குறித்து கவலை தெரிவித்தனர். (51)

# மருதங்கேணிக்கு மின்விநியோகம் இன்னுமில்லை

வடமராட்சி கிழக்கு,ஓக.1

மருதங்கேணிப் பகுதிக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் மின்கம்பங்கள் நடப்பட்டும் இது வரை மின் விநியோகம் ஆரம்பிக்கப்படவில்லை.

குடாநாட்டில் இருந்து பளை வரையே மின்சாரம் வழங்கப்படுகின்றது. கடந்த டிசெம்பர் மாதத்தில் பளையிலிருந்து மருதங்கேணி வரை மின்கம்பங்கள் நடப்பட்டன எனினும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மின்சாரம் வழங்கப்படவில்லை.

வடமராட்சி கிழக்கில் கேந்திர நிலையமாகவுள்ள மருதங்கேணியிலேயே உதவி அரசாங்க அதிபர் பணிமனை, வைத்தியசாலை மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்கள் என்பன அமைந்துள்ளன.

(182)

# சுனாமி பாதித்த குடும்பங்களுக்கு வடமராட்சியில் 1959 வீடுகள்

கரவெட்டி,ஓக.1

இடம்பெயர்ந்தோருக்கான உலக வங்கித் திட்டத்தின் கீழ் வடமராட்சியில் ஆயிரத்து 959 வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்ற பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையால் வடமராட்சியில் இடம்பெயர்ந்த மக்களுக்கென இந்த வீடுகள் உலக வங்கியின் உதவியுடன் கட்டுவிக்கப்படுகின்றன.

378 நிரந்தர வீடுகள்இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 2ஆயிரத்து 39 பகுதிச் சேத வீடுகள் முற்றாகப் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மேலும் 736 வீடுகள் கட்டப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் நிறுவனங் களின் பங்களிப்பில் ஆயி ரத்து 204 வீடுகள் கட்டப்பட்டு வரு கின்றன.

அனைத்து வீட்டுத்திட்டங்களும் யாழ்.அரசாங்க அதிபரின் வேண்டுகோளின்படி ஒக்ரோபர் மாதத்திற்குள் முடிவடையவேண்டும் என பரு[illegible]த்துறை பிரதேச செயலர் ஆர்.வர[illegible]ஸ்வரன் தெரிவித்தார். (70)

## நாளை

ஆடி 17
புதன்கிழமை
02.08.2006
திதி : அட்டமி
முன்னிரவு : 11.19
நட்சத்திரம் :சுவாதி
முன்னிரவு : 07.28
சுபநேரம் : 04.33 - 06.03
ராகுகாலம் : 12.03 - 03.33

## உதயவாக்கு

திருப்தி இயற்கையான செல்வம். சொகுசான வாழ்வு செயற்கையான வறுமை.

- ஓர் அறிஞர்.

## கரம்பைக்குறிச்சியில் குடும்பஸ்தர் மீது தாக்குதல்

கரவெட்டி, ஓக.1

வரணி, கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த இளம்குடும்பஸ்தர் ஒருவர் கடந்த திங்கட் கிழமை இனம்தெரியாதோரால் தாக்கப்பட் டார் என்று கூறப்படுகிறது.

அதே இடத்தைச் சேர்ந்த பிறைசூடி சுதா கரன் (வயது-25) என்பவரே இனந்தெரி யாத குழுவினரின் தாக்குதலுக்குள்ளாகி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளார். (70)

## இலங்கை வங்கியின் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஓக.1

இலங்கை வங்கியின் 67 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.ஆஸ் பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி மேற்றரக்கிளையில் வங்கி முகா மையாளர் எஸ்.சிவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (204-51)


### சுன்னாகம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பகிரங்க ஏல விற்பனை

மேற்படி சங்கத்திற்கு சொந்தமான பின்வரும் பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

1. ஒரு மினி உழவு இயந்திரம் 75 குவாட்டா கலப்பை, பெட்டி உட்பட
2. நீர் இறைக்கும் இயந்திரம் (என்வீல்ட்) இரண்டு
3. மினி தண்ணீர் தாங்கி (பவுசர் 3010 போத்தல்) ஒன்று

திகதி : 14.08.2006
நேரம் : முற்பகல் 11 மணி
இடம் : சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் மின்சார நிலைய வீதி, சுன்னாகம்

மேற்படி பொருள்களை சங்கத்தின் அலுவலக நேரத் தில் பார்வையிடலாம். ஏலத்தில் பொருள்களை பெறுவதற்கு தகுதியானவர்கள் உரிய பணத்தை செலுத்தி உடன் பொருள்களை எடுத்துச் செல்லல் வேண்டும்.

28.07.2006

கூட்டுறவுச்சேவையிலுள்ள
பொது முகாமையாளர்
(கா.இளங்கோ)

(சி-50598)



ஓம்

ஸ்ரீ ராம ஜெயம்

### வரலட்சுமி விரதம்

நிகழும் வியவருஷம் 04.08.2006 வெள்ளிக்கிழமை வரலட்சுமிக்கு காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று சுவாமி வீதியுலாவரும் நிகழ்வு நடைபெறும். தொடர்ந்து நோன்பு நோற்கும் அடியார்களுக்கு சிவாச்சார்யார்களினால் நூல்கட்டுத லும், பிரசாதம் வழங்குதலும் இடம்பெறும். அடியார்கள் வருகைதந்து சுவாமியின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம். பரிபாலனசபை.

(52826)(21.19.14)



### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
ஜெயகாந்தன் பிறேமாவதி அவர்களின் அன்புத் தாய்
திருமதி கனகலிங்கம் இராசமணி

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத் தைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

(52828)(21.14.19)



### துயர் பகிர்கின்றோம்



சத்திரசிகிச்சை நிபுணர்
சு.ரவிராஜ் அவர்களின் தந்தை
வைத்திய கலாநிதி
க.சுப்பிரமணியம்

அவர்களின் மறைவையொட்டி (29.07.2006) துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியரும்
வனிக்கா மெடிக்கல்ஸ்,
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

(52829) (21.19.14)



### 3ஆம் ஆண்டு நினைவுடன்

தோற்றம் 21 ★ 06 ★ 1976



மறைவு 05 ★ 08 ★ 2003

அமரர் மகாலிங்கம் மகேஸ்வரன் (ரகு)

(கலைவாணன் வெதுப்பக உரிமையாளர்)

திதி: 01-08-2006

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ எம் துயரம்
அறுந்திடுமோ உங்கள் அன்பு - ரகு
உறங்கிய உறவுகள் நினைவுகளை மீட்கின்றோம் - ஏக்கத்துடன்
உடலால் நீங்கள் எங்களை விட்டு பிரிந்தாலும்
உள்ளத்து உணர்வால் உங்களோடு வாழ்கின்றோம் ரகுவே!

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

நீங்காத நினைவுகளுடன்...
அன்பு அம்மா, அண்ணா, தங்கை,
தம்பிமார், அண்ணி, மச்சான், பெறாமகள்.

(52830)(21.19.14)



### 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 ★ 05 ★ 1959



மறைவு 01 ★ 08 ★ 2002

திருமதி நட்சத்திரம் விமலா

(வர்த்தகத் திணைக்கள உத்தியோகத்தர்)

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
உன் அன்பு முகம் எமைவிட்டு - நீங்காது.
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

கணவர், பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

(52827) (24.21.14.19)


## நிழல்குடையின்றி பயணிகள் சிரமம்

சாவகச்சேரி, ஓக.1

சாவகச்சேரி கன கன்புளியடிச் சந்தி யில் அமைந் துள்ள நிழல்குடை சேத மடைந்துள்ளதால் பயணிகள் பெரும் சிரமம் அடைவதா கத் தெரிவிக்கப்படு கிறது.

இப்பகுதியில் முன்னர் பயணி களின் நலன் கருதி ராணுவத்தினர் தற் காலிக நிழல் குடை அமைத்துக் கொடுத் திருந்தனர். அது தற் போது சேதமடைந் துள்ளது. இதனால் பஸ்ஸுக்காக காத்து நிற்கும் பயணிகள் மழை, வெயில்களில் சிரமமடைகின்றனர்.

பயணிகளின் நலன் கருதி இந்த நிழற்குடையை உரி யவர்கள் புரமைத் துத் தரவேண்டும் என இப்பகுதி மக் கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (204-31)

## உலர் உணவு விநியோகம்

வடமராட்சிகல்வி வலயத்தைச் சேர்ந்த பருத்தித் துறை, கர வெட்டி ஆகிய கோட் டங்களில் உள்ள பாடசாலைகளின் மாணவர்களுக்கான இரண்டாம் தவணைக் குரிய காலை உணவு வழங்குவதற்கான உலர் உணவுப் பொருள்கள் அந்தந் தப் பாடசாலைகளுக்கு அண்மையில் வழங் கப்பட்டுள்ளன. எனத் தெரிவிக்கப்பட்டது. (204-117)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 10 - 10 - 1930



மறைவு 02 - 07 - 2006

திருமதி
துரை நாகரட்ணம்

*நிலவுலகில் ஆயிரம் உறவுகள் தான் இருந்தாலும்*
*நிழல் தந்த பெருமரம் நீங்கள் இன்று இல்லையே!*
*நீரின்றிய தாவரம் போல் உம் பிரிவால் தவிக்கின்றோம்*
*நீங்காது உங்கள் நினைவு எம் உயிர் உள்ளவரை!*

02.07.2006 அன்று இறைபதம் அடைந்த எமது குல விளக் கின் 31 ஆம் நினைவுநாள் இன்று (01.08.2006) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

395/ 4, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(52735)(21.19.14)


### மரண அறிவித்தல்கள்


**காசிப்பிள்ளை இராசரெத்தினம்**

(இளைப்பாறிய கலால் திணைக்கள உதவி ஆணையாளர், Asst. Commissioner Of Excise, தலைவர், நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தானம்)



கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட காசிப்பிள்ளை இராசரெத்தினம் அவர்கள் 30.07.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணிதேவியின் அன்புக் கணவரும் நிரஞ்சினி (ஜேர்மனி), இராஜ குமாரன் (லண்டன்), சூரியகுமார் (லண்டன்), கமலினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

101, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.
021 222 7022

தகவல்:
குடும்பத்தினர்.

(52823) (39.21.14.19)

**நவரத்தினம் மகாலிங்கம்**

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற் போது சரவணை மேற்கைப் வசிப்பிடமாகக் கொண்டவருமான நவரத்தினம் மகாலிங்கம் அவர்கள் நேற்று (31.07.2006) திங்கட் கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் சுந்தரம் தம்பதியினரின் அன்பு மருமகனும் இந்திராணி (இந்திரா) யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகராசாவின் அன்புச் சகோதரனும் மகேந்திரன், மகேந்திரராணி,மனோகரன், மனோகரி, காண்டீபன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் கவிதா, சத்திய சீலன், ஆகியோரின் அன்பு மாமனும் அனுஷா, அனுஷன் ஆகி யோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2006) செவ் வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சரவணை புண் ணங்கண்டி இந்துமயானத்திற்கு பிற்பகல் 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை மேற்கு,
வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.

(52837)(21.19.14)

## ஐயனார் கோயில் கிராமம் அபிவிருத்தி

வடமராட்சி,ஓக.1

நெல்லியடி மகாத்மா வீதியிலுள்ள ஐய னார் கோயில் கிராமம் விசேட திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை கரவெட்டி பிரதேச செயலகம் முன்னெடுத்துள்ளது.

பிரதேச செயலக அபிவிருத்திப் பிரிவை சேர்ந்த அலுவலர் குழுவினர் இக்கிராமத்தை நேரில் பார்வையிட்டு, அபிவிருத்தித் திட் டங்களை முன்வைத்துள்ளனர்.

இதற்கமைய புதிய கிணறு, சனசமூக நிலையம், வீட்டுத்திட்டம் என்பன அமைத் தல், கோயில் வீதி என்பன புனரமைத்தல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்படவுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது. (204-117)

# சமாதானத்தை எதிர்பார்த்தனர் மக்கள்; ஆனால் மரண ஓலங்களையே கேட்கின்றனர்

## மறையுரையில் யாழ். ஆயர் வேதனை

குருநகர்,ஓக.1

சமாதானத்தை எதிர்பார்த்திருந்தனர் மக் கள்; ஆனால் மரண ஓலங்களையே அவர் கள் கேட்கவேண்டியுள்ளது.

இவ்வாறு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கவலை தெரி வித்தார்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் திருவிழாத் திருப்பலியின்போது தலைமை தாங்கி திருப்பலியை நிறைவேற்றியபோதே யாழ். ஆயர் இதனைக் குறிப்பிட்டார்.

தனது மறையுரையில் ஆயர் மேலும் கூறியதாவது:-

சமாதானத்தை எதிர்பார்த்துக் கொண்டி ருக்கின்ற நாங்கள் எதனை இன்று அனு பவிக்கின்றோம்? சமாதானமும் இல்லை; போரும் இல்லை அதற்குப் பதிலாக நாளாந் தம் பொதுமக்கள் செத்துக்கொண்டே இருக் கிறார்கள். நாளாந்தம் மரண ஓலங்களைக் கேட்டுக்கொண்டே இருக்கிறோம்.

அமைதி, பேச்சுவார்த்தை தீர்வு என்று பல முயற்சிகள் எடுக்கப்பட்டு இன்னமும் பயமும் அச்சமும் எங்களை விட்டு நீங்க வில்லை. நாளாந்தம் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக் கின்றோம்.

எதிர்காலம் குறித்து பயம் தொடர்கிறது. மீண்டும் இன்னுமொரு யுத்தம் வெடிக்குமா? நாங்கள் இடம்பெயர்ந்து போகவேண்டுமா? தொழில்துறைகளை வீடு வாசல்களை இழந்து உயிரைப் பறிகொடுத்து இந்த அவலங்களில் தொடர்ந்து சீவிக்கவேண்டுமா என்ற பல கேள்விகள் எமது மனங்களை விட்டு நீங்க வில்லை

கவலைகளிலேயே எமது வாழ்நாள்கள் கழிகின்றன.

கிறிஸ்தவ சீவியம் இலகுவானதல்ல மிகவும் கஷ்டமானது. நாளாந்தம் சிலுவை யைச் சுமந்துகொண்டு யேசுவின் பின்னால் செல்லுகின்ற சீவியம். ஆகையால் நாங்களும் இந்த வாழ்க்கையில் எமது சிலுவையைச் சுமந்து செல்ல எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் - என்றார் யாழ். ஆயர். (51)

## ஊர்காவற்றுறை - காரைநகர் இடையே படகுப் பாதைச் சேவை நேரம் மாற்றம்

நல்லூர், ஓக.1

ஊர்காவற்றுறைக்கும் கரைநகருக்கும் இடையேயான படகுப்பாதைச் சேவை நேரம் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மாற்றிய மைக்கப்பட்டுள்ளன என்று வீதி அபிவி ருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

இதன்படி ஊர்காவற்றுறையில் இருந்து காரைநகருக்கான படகுப் பாதைச் சேவை தினமும் காலை 7 மணி, 8 மணி, 9.30 மணி, நண்பகல் 12 மணி, பிற்பகல் 2 மணி, 2.45 மணி, 4மணி, மாலை 5 மணி ஆகிய நேரங் களில் ஆரம்பமாகும்.

காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறைக் கான படகுப்பாதைச் சேவை காலை 7.30 மணி, 8.15 மணி, முற்பகல் 10 மணி, நண்பகல் 12 மணி, பிற்பகல் 2.30 மணி, 3.30 மணி, 4.45 மணி மாலை 5.30மணி ஆகிய நேரங் க்ளில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட் டது.

(202-111-51)



ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியின் யாழ்.மாவட்டக் கிளையில் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட விற்பனை முகாமையாளர் ஜேசன் ஜெயகுலராஜா மோட்டார் வாக னத்துக்கு பூரண காப்புறுதி செய்திருந்த அ.ராஜ்குமாருக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறு மதியான பூரண இழப்பீட்டுக் காசோலை வழங்குவதையும் அருகில் பொதுக் காப்புறுதித்துறை அலுவலர்களான எஸ்.நிரஞ்சன், ஆர்.பாலரூபன், எஸ்.பிரபாகரன், எஸ்.ரசிகாந் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (204)

## நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் அபி விருத்திப் பணிகளுக்கு என பன்முகப்படுத் தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது எனப் பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் தெரிவித்தார்.

பழங்கிணற்றடி பாதாள வைரவர் கோயில் அறநெறிப் பாடசாலைக்கு தளபாடம் கொள் வனவு செய்ய 75 ஆயிரம் ரூபாவும் - நல் லூர் பிரதேச சபையின் கோண்டாவில் உப அலுவலகப் பொது நூலகத்திற்கு தளபாடம் கொள்வனவு செய்ய ஒரு லட்சம் ரூபாவும் - திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலை யப் பாலர் பாடசாலை புனரமைப்புக்கு 80 ஆயிரம் ரூபாவும் -

கொக்குவில் வராகி அம்மன் சனசமூக நிலையத் திருத்த வேலைகளுக்கு 25 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (204-111)

## கட்டுடைக்கு வலுமிக்க மின்சாரம் பெற்றுத்தரும்படி கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஓக.1

கட்டுடைப் பிரதேசத்திற்கு அதிக வலுவு டைய மின்சாரம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.பொ.மா.க. முதலியார் வேண்டுகோள் விடுத்ள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற் றது. அதில் கலந்துகொண்டு கிராம அபி விருத்தி குறித்து கருத்து தெரிவித்த போதே மேற்படி வேண்டுகோளை அவர் விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்ததாவது:-

இப்பகுதியில் வலுக்குறைந்த மின்சாரம் வழங்கப்படுவதால் இரவு வேளைகளில் மின் பாவனையாளர்கள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர். இரவு வேளை களில் மின்குமிழ்கள் பிரகாசம் இன்றி ஒளிர் கின்றன. இதனால் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் அசௌகரியங்களை அடை கின்றனர்.

அது மட்டுமன்றி மின்சாரத்தை மூலமாக வைத்து தொழில் செய்வோரும் பாதிக்கப் படுகின்றனர். இதனால்உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு வலுக் கூடிய மின்சாரம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(204-135)

## வட்டுக்கோட்டையில் நாய்களுக்கு இன்றும் நாளையும் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஓக.1

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படவுள்ள நாள், நேரம் மற்றும் இடம் பற்றிய விவரங்கள் வருமாறு-

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் முற்பகல் 11.30 மணிவரை அர சடி பேபி கடையடி, 3ஆம் பனை வைரவர் கோயிலடி, அரசடி பாடசாலையடியிலும் -

முற்பகல் 11.30 மணி முதல் 1.30 மணி வரை வட்டுக்கோட்டை சந்தி மாதிரி சந்தை யடி, நாவலர் வைரவர் கோயிலடி, திருஞான சம்பந்தர் பாடசாலையடியிலும் -

பிற்பகல்1.30 மணிமுதல் 3.30 மணி வரை முதலி கோயிலடி அம்பாள் சனசமூக நிலையம், செம்பாடு சனசமூக நிலையம், செம்பாடு 10ஆம் வட்டாரக் கிணற்றடியிலும் விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் 11.30 மணிவரை காந்திஜி சனசமூக நிலையம், நேருஜி சனசமூக நிலையம், கற் பகச்சோலை சனசமூக நிலையம் ஆகிய வற்றிலும் -

முற்பகல் 11.30 மணிமுதல்1.30 மணி வரை கற்பகப்பிள்ளையார் கோயிலடி, சீக் காய் வீதி, டச்சுவீதி ஆகிய இடங்களிலும் -

முற்பகல் 1.30 மணிமுதல் 3.30 மணி வரை கண்ணகியம்மன் கோயிலடி, சிந்து புரம், கலைநகர் வைரவர் கோயிலடி ஆகிய இடங்களிலும் நாய்களுக்கு தடுப்பூசி ஏற் றப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளு மாறு நாய் வளர்ப்போர் கேட்கப்பட்டுள் ளனர். (204)




## நகரசபை ஊழியரை காணவில்லை

கரவெட்டி, ஓக 1

வல்வெட்டித்துறை நகர சபையின் பாது காப்பு ஊழியர் ஒருவர் கடந்த சனிக்கிழமை முதல் காணாமற்போயுள்ளார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவ லகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கொற்றாவத்தை பொலிகண்டியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை டனிபாலன் (வயது 25) என்பவரே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நகரசபைக்குள் கட மைக்குச் சென்ற அவர் அங்கிருந்து காலை 9.30 மணியளவில் சிற்றுண்டி அருந்தச் சென்றுள்ளார் அவ்வாறு சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை இது தொடர்பாக நகர சபையினரும் காணாமல் போனவரின் உறவி னர்களும் வல்வெட்டித்துறைப் பொலீஸிலும் மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளனர். (202-70)

## 4 அருட்சகோதரர்கள் திருநிலை பெற்றனர்

குருநகர்,ஓக.1

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் நால்வர் புதிய குருக் களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அருட்சகோதரர்கள் பிரவீன் மகேசன், றெனி பீஷ்மன், பே.பெனிக்னாஸ், விஜய கமலன் அல்பிரட் ஆகியோரே யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண் டகையால் கடந்த 26ஆம் திகதி யாழ். மரி யன்னை தேவாலயத்தில் புதிய குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

## அல்லைப்பிட்டிக் குடியேற்றத் திட்டம் கைவிடப்படவில்லை என்கிறது ஜி.ரி.இசற்

அல்லைப்பிட்டி குடியேற்றத்திட்டம் கை விடப்படவில்லை என்று ஜேர்மன் அரசுக்குச் சொந்தமான ஜி.ரி.இசற் நிறுவனம் தெரிவித் துள்ளது.

கடந்த மாதம் 22ஆம் திகதி உதயனில் 'அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் மெத் தனம்; அல்லைப்பிட்டியில் வீடமைப்புத் திட்டம் ரத்து' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக அனுப்பியுள்ள விளக் கத்திலேயே ஜேர்மன் அரசுக்குச் சொந்தமான ஜி.ரி.இசற் நிறுவனம் மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளது.

இது குறித்து அந்த நிறுவ்னம் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அல்லைப்பிட்டி குடியேற்றத்திற்கான உள்ளக வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு நிர் மாண வேலைத்திட்டங்களுக்கான நிதி ஆதா ரங்களை ஜி.ரி.இசற் நிறுவனம் ஒதுக்கீடு செய்திருந்தது. ஆனால் வீடுகள் அமைப் பதற்கான நிதி வழங்கலை ஜே.ஆர்.எஸ். என்ற கத்தோலிக்க மத நிறுவனமே வழங்குகிறது.

இத்திட்டத்திற்கு ஜி.ரி.இசற் நிறுவனத்தி னால் கடந்த வருடப் பிற்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஆதாரங்கள் அவசர குறு கிய கால புனர்நிர்மாண வேலைத்திட்டங் களுக்கானதும் குறிப்பிட்ட கால எல்லைக் குள் பூர்த்திசெய்யப்படவேண்டியதுமான முன் நிபந்தனைகளை கொண்டவையாகும். இதன் காரணமாக வேலைகள் ஆரம்பிக்கப் படாத நிலையில் இருந்த திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் கால எல்லைகள் முடிவடைந்த நிலையில் இரத்துச் செய்யவேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டது. இருப்பினும் எமது நிறு வனம் இத்திட்டத்தை முற்றாக கைவிட வில்லை. நிலைமை சுமுகமடையும் போது இவற்றிற்கான நிதியைப் பெற்று இத்திட்டங் களை நிறைவேற்ற ஆவலாக இருக்கின்றோம். அத்துடன் வீடுகள் அமைப்பதற்கான நிதி ஏற் பாட்டை ஏற்றுக்கொண்ட கத்தோலிக்க மத நிறு வனம் இத்திட்டத்தை கைவிடவில்லை என குருநகர் குடியேற்ற புனரமைப்புக்கான இணை யம் தெரிவித்துள்ளது? - என்று தெரிவிக்கப் பட்டது.

## நூலகம் தகவல் விஞ்ஞான கற்கைநெறிக்கு மீட்டல் வகுப்புகள்

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப் ளோமா கற்கைநெறி தரம் I பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் இலங்கை நூலகச் சங்கத் தின் யாழ்ப்பாண நிலையத்தால் எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர்கூடத்தில் நடத்தப்பட வுள்ளன.

எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்குத் தோற் வுள்ள மாணவர்களை இவ்வகுப்புகளி கலந்துகொள்ளுமாறு நிலைய ஒருங் கிணைப்பாளர் திருமதி கே.சந்திரசேகர் கேட் டுள்ளார். (202)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying



யாழ் - கொழும்பு விமான சேவை

முருக பக்தர்

# தம்பிநாதன் வேலாயுதன்

அவர்களுக்கு

# எமது கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்



30.07.2006 அன்று சந்நிதிக்கடலில் நீராடும்போது சுழியில் சிக்கி தன்னுடைய 68 ஆவது வயதில் இறைபதம் அடைந்தார் முருக பக்தர் தம்பிநாதன் வேலாயுதன் அவர்கள். அன்னார் எமது ஆலயத்தின் வளர்ச்சிக்காக பெரும் நிதி உதவி புரிந்தவராவார். கண்டாமணி அதற்குரிய கோபுரம், வெள்ளியால் ஆன மயில்வாகனம், நடராசப் பெருமான் விக்கிரகம், அதற்குரிய மண்டபம், மூன்று சக்திகளாக விளங்கும் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூர்த்திகளுக்கான மண்டபங்கள் ஆகியவை அன்னாரின் நிதி உதவியால் அமைக்கப் பட்டன. அத்தோடு அமரரின் முயற்சியால் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் பஜனை, அடியார்களுக்கு பிரசாதம் வழங்குதல் போன்ற பல்வேறு தொண்டுகள் ஆற்றப்பட்டன. அமரர் எமது ஆலயத்திற்கு ஓர் இராஜே புரம் அமைக்க வேண்டும் என்ற விருப்புடன் தனது சொந்த நிதியில் அந்தவேலையைத் தொடங்கி அவ்வேலை முருகனின் திருவருளால் முடிவுறும் நிலையை எட்டியுள்ளது. அத்தோடு இவ்வாலயத்தில் மணிமண்டபம் அமைக்கும் வேலையும் அமரரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இவ்வாறு பல தொண்டுகளை ஆற்றி இன்று முருகன் பாதம் அடைந்த அமரரின் இழப்பு எமக்குப் பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினர், உற்றார், உறவினர், அடியார்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா கந்தவேல் பெருமானுடைய பாதத்தை அடைந்து சாந்திபெற முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

'வாழிய அவர் புகழ்'

"துறந்தார் பெருமை துணைக்கூறின்
வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

பரிபாலன சபையினரும்,
முருகன் அடியார்களும்.
கைதடி - கயற்றசிட்டி
அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்.

கைதடி வடக்கு,
கைதடி.

(52812)(21-11-15)

# தண்ணீர் பிரச்சினைக்குத் தாக்குதல் தீர்வாகாது; இரு தரப்பினரையும் சாடுகின்றது ஐ. தே. கட்சி

அரசும் புலிகளும் பரஸ்பரம் குண்டுத் தாக்குதல் நடத்துவது மாவிலாறு கால்வாய்த் தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. இதன் விளைவாக மாவிலாறு அணைக் கட்டு சிதைவுறும் அபாயம் ஏற்படும் என்று ஐ.தே. கட்சி தெரிவித்திருக்கிறது. இது தொடர்பாக அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுமக்கள் நீரைப். பெற்றுக்கொள்வதைத் தடுக்கும் புலிகளின் நடவடிக்கையை ஐ. தே. கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. மூதூர் கிழக்கு மற்றும் ஈச்சிலம்பற்று மக்களின் தண்ணீர் மற்றும் உணவு, விவசாய நடவடிக்கை தொடர்பான பிரச்சினைக்கு சேருவில மக்களுக்கான நீரைத் தடுப்பது தீர்வாக அமையாது. எனவே, இரு தரப்பினரும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடந்துகொள்ளவேண்டும்.

**ஜெனீவா ஒப்பந்தத்தை மீறும் செயல்**

திருகோணமலை மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கைக்கு நீரைத்தடுக்கும் புலிகளின் நடவடிக்கை ஜெனீவா ஒப்பந்தத்தை மீறும் செயலாகுமென கடந்த 27 ஆம் திகதி இலங்கை சமாதான சபை தெரிவித்திருந்தது. 1949ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட ஜெனீவா ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையிலோ அல்லது இரு தரப்புகளுக்கிடையிலோ இடம்பெறும் ஆயுத மோதல் தொடர்பானது. அதேபோல் இந்த ஒப்பந்தம்மூலம் சர்வதேச மனித உரிமைகள் சட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மாவிலாறு சம்பவத்தை இரு நாடுகளுக்கிடையிலான மோதல் மற்றும்* சர்வதேச மனித உரிமைகள் கணக்கில் இலங்கை சமாதான சபை ஏற்பது துரதிர்ஷ்டவசமானது என்பதே எமது கருத்தாகும்.

இன்று நாம் முகம் கொடுக்கின்ற உள்ளூர் மோதலை, இரு சமமான நாடுகளுக்கிடையில் சமமான உரிமையுடைய இரு தரப்புகளுக்கிடையிலான மோதலென ஜெனீவா ஒப்பந்தத்தின் முதலாவது சரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதை இச்சம்பவத்துடன் இணைத்துப் பேசுவதன்மூலம் ஏற்றுக்கொள்வதாகின்றது. இதற்கு முன்னைய அரசுகள் உள்ளூர் மோதல்களை இரு நாடுகளுக்கிடையிலான மோதலெனக் குழப்பிக் கொள்ளவில்லை. புலிகள் அமைப்பு எப்போதும்இந்த உரிமையைத்தான்கோரி வந்தது. அரசும் தாங்களும் சமமான நிலையிலுள்ள இரு தரப்புகளெனவும், பிரச்சினைக்குத் தீர்வு இரு இனங்களுக்கிடையில் ஏற்படவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளும்படியே கேட்டுவந்துள்ளனர்.

இந்த நிலைப்பாட்டை உறுதிசெய்யும் வகையில் பல சந்தர்ப்பங்களில் ஜெனீவா ஒப்பந்தத்தை புலிகள் மேற்கோள் காட்டியுள்ளனர். புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினரான வீ. உருத்திரகுமார் சமீபத்தில் ஜெனிவா ஒப்பந்தத்தை மேற்கோள் காட்டி எட்டப்படும் எந்தத் தீர்வும் தமது சுயாதிபத்தியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

சேர்பியா மற்றும் மொண்டி திக்ரோவா தொடர்பாகவும் இவ் ஒப்பந்தமே அடிப்படையாகக் கொள்ளப்பட்டது.

சேர்பியாவுடன் இணைந்திருப்பதா அல்லது பிரிந்து செல்வதா என்ற தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு மொண்டி திக்ரோவாவுக்கு வழங்கப்பட்டது. அந்நாடு தனியாகப் பிரிந்து செல்வதெனத் தீர்மானித்தது. இப்போது மொண்டி திக்ரோவா அரசு உருவாகிக் கொண்டிருக்கிறது.

**மஹிந்த சிந்தனை**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்தப்படும் என மஹிந்த சிந்தனை மூலம் உறுதியாக்கப்பட்டது. மஹிந்த சிந்தனையில் கீழ்க் கண்ட நான்கு விடயங்களும் அடங்கியுள்ளனவென்பது இப்போது இடம்பெறும் நடவடிக்கைகள் மூலம் நிருபணமாகிறது.

* பேச்சுகள் நடத்தும் இடத்தை அரசு தீர்மானித்து பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரித்தும் பொறுப்பைப் புலிகளிடம் ஒப்படைப்பது. முன்னர் இவ்விரு விடயங்கள் தொடர்பாகவும் தீர்மானிக்கும் பொறுப்பு இலங்கை அரசிடம் இருந்தது.
* ஜெனீவாப் பேச்சுகளில் புலிகளின் காவல்துறைக்கு சட்டபூர்வ அங்கீகாரம் பெற்றுக்கொடுத்தது.
* உப பொலிஸ்பரிசோதகர் பந்துஜீவ போபிட்டிகொட தொடர்பாகப் புலிகளின் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக் கொண்டது.
* வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைக்கு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தவிர்த்து ஜெனீவா ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பது.

மஹிந்த சிந்தனையின்படி தற்போதைய பிரச்சினைக்கு ஜெனீவா ஒப்பந்தத்தை தொடர்புபடுத்துவதன் மூலம் அரசு புலிகளின் கோரிக்கைக்கு ஆதரவளித்து தனிநாடு மட்டத்துக்குப் புலிகளைத் தூக்கி வைத்துள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

## ஐ.தே.கவின் எம்.பி. அரசில் இணைந்தார்

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் நியூமல் பெரேரா ஆளும் கட்சியில் நேற்றுமுன்தினம் இணைந்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி அரசில் இணையும் 5ஆவது எம்.பி. இவராவார். இவருக்குப் பிரதி அமைச்சர் பதவியும் வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய அறிவு ஜனாதிபதிக்குத் துளியும் இல்லை

## ஐ.தே.கட்சி எம்.பி. அத்தநாயக்க சொல்கிறார்


கொழும்பு,ஓக.1

''இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய அறிவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இல்லை. அப்படி அறிவிருந்தால் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்களை ஒருபோதும் பணம்கொடுத்து வாங்கி தம்பக்கம் சேர்க்கமாட்டார். அவருக்குக் கொஞ்சமேனும் மூளை இல்லையென்பதை அவர் தொடர்ந்து காட்டிக் கொண்டிருக்கிறார். தவறாது முட்டாள்தனமான செயற்பாட்டிற்கு மக்களிடம் அவர் விரைவில் வாங்கிக்கட்டுவார்''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுமுன்திம் 'உதயனு'க்குத் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கள் தொடர்ந்தும் அரசின் பக்கம் பாய்வது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் அதுபற்றி மேலும் கூறுகையில்,

நாட்டின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது. அப்பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்று கொஞ்சமேனும் ஜனாதிபதிக்குத் தெரியாது.

சர்வகட்சி மாநாடுகளைக் கூட்டுவதும், குழுக்களை அமைப்பதும் என்றே அவரது செயற்பாடு அ மந்துள்ளது. இதற்கு அப்பால் எமது கட்சியின் எம்.பிக்களைப் பணம் கொடுத்து வாங்கி தம்பக்கம் இணைத்து வருகின்றார்.



தனது அரசியல் இருப்பைப் பலப்படுத்துவதாக நினைத்துக்கொண்டே அவர் இவ்வாறு செய்கின்றார். ஆனால், அவரது இந்தச் செயற்பாடு அவரது வீழ்ச்சிக்குக் காரணமாக அமையும்.

இப்போது நாடு பல பிரச்சினைகளை ஒன்றாக எதிர்நோக்குகின்றது. அப்பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்றால் பிரதான எதிர்க்கட்சியான எம்மை அரவணைத்துக்கொண்டு செயற்படக்கூடிய செயற்றிட்டம் ஒன்றை ஜனாதிபதி வகுக்கவேண்டும்.

இதைவிட்டுவிட்டு அவரது இயலாத்தன்மையைக் காட்டும் வகையில் எமது கட்சியில் உள்ளவர்களை அவர் பக்கம் இழுத்துக் கொண்டிருக்கிறார் ஜனாதிபதி. இதன்மூலம் நிச்சயம் அவரால் அவரது அரசைப் பலப்படுத்தமுடியாது.

ஜனாதிபதியின் இந்தச் செயற்பாட்டின் பின்விளைவை அவர் நிச்சயம் அனுபவிப்பார். மக்கள் மிக விரைவில் ஜனாதிபதிக்குப் பாடம் புகட்டுவர். நாட்டின் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வைக் காண்பது எப்படியென்று அவருக்கு மக்கள் விளக்கமளிப்பார்கள் - என்றார். (த)

# மாவிலாறு சம்பவம் குறித்து அரசு இணைத்தலைமைகளிடம் புகார்

மாவிலாறு விவகாரம் தொடர்பாக அரசு இணைத்தலைமை நாடுகளிடமும், பிரிட்டனிடமும் முறையிட்டிருக்கிறது என்று அரச உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆற்று நீர் மறிக்கப்பட்டதால் அந்தப் பிரதேச மக்கள் எதிர்நோக்குகின்ற சிரமங்கள் தொடர்பாகவும், அதனால் அவர்கள் கோபமடைந்திருக்கின்றமை குறித்தும் அரசு இணைத்தலைமை நாடுகளிடம் தெரியப்படுத்தியிருக்கிறது.

தற்போதைய நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக தொலைபேசி மூலம் இந்த இணைத்தலைமை நாடுகளுக்கும், பிரிட்டனுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது என்றார் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹொன்ன? (த)

# வடக்கு - கிழக்கைப் பிரித்தால் முஸ்லிம்களுக்கு அது ஆபத்து

## எச்சரிக்கிறார் பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன்



கொழும்பு, ஓக.1

"வடக்கு-கிழக்கைப் பிரிப்பதன் மூலம் முஸ்லிம்களுக்கு எந்தவிதமான இலாபமும் இல்லை. இணைந்த வடக்கு - கிழக்குக்கு உள்ளேயே முஸ்லிம்களுக்குத் தனியாகவும், தமிழர்களுக்குத் தனியாகவும் நிலத்தொடர்பற்ற அதிகாரப் பகிர்விலான தீர்வுகளை வழங்கமுடியும்.

''வடக்கு - கிழக்கு பிரிக்கப்படவேண்டும் எனச் சொல்லுகின்ற அமைச்சர் அதாவுல்லாவும் ஜே.வி.பியினரும் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிங்களவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக முஸ்லிம்களை மறந்து சிங்களவர்களுடன் இணைந்து அரசியல் நடத்துவதை அமைச்சர் அதாவுல்லா நிறுத்தவேண்டும்'' - இவ்வாறு பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் நேற்றுமுன்தினம் 'உதயனு'க்குத் தெரிவித்தார். வடக்கு- கிழக்குப் பிரிப்புக் கோரிக்கை தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கைப் பிரித்தே தீரவேண்டும் என ஜே.வி.பியினரும் அமைச்சர் அதாவுல்லாவும் கூறிவருகின்றனர். அவர்கள் கூறுவதைப்போல், வடக்கு- கிழக்கைப் பிரித்தால் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள முஸ்லிம்களுக்கு எந்தவிதமான இலாபமும் இல்லை. வடக்கு - கிழக்கு பிரியவேண்டும் எனக் கூறுகின்ற இவர்கள் பிரித்தபின்னர் முஸ்லிம்களுக்கு எந்தவிதமான தீர்வு வழக்கப்படவேண்டும் எனக் கூறவில்லை.

தமிழர்களும் முஸ்லிம்களும் நிலத்தொடர்பற்ற முறையில் வாழ்கின்றனர். வடக்கு-கிழக்கைப் பிரித்தால் இரண்டு இனங்களுக்கும் இலாபமில்லை. இணைந்த வடக்கு- கிழக்கிற்கு உள்ளே முஸ்லிம்களுக்குத் தனியாகவும் தமிழர்களுக்குத் தனியாகவும் அதிகாரப் பகிர்வு மூலமான தீர்வை வழங்குவதே சரியான ஒன்றாக அமையும்.

வடக்கு-கிழக்கைப் பிரிப்பதற்குமுன் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டு அகதிகளாக வாழும் முஸ்லிம்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை அதாவுல்லா போன்றவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு அவர்களுக்கு மீளக்குடியேற விருப்பமில்லையென்றாலும் வாக்கெடுப்பின் மூலம் அவர்களின் அந்த விருப்பத்தை அறிந்து அதன் பிறகு வடக்கு-கிழக்கைப் பிரிப்பதுபற்றி யோசிக்கலாம்.

ஆனால், அதைச் செய்யாது வடக்கு - கிழக்கைப் பிரிக்கவேண்டும் எனக்கூறினால் அவர்களின் மீள்குடியேற்றம் பாதிக்கப்படும். அந்த வடக்கு - கிழக்கைப் பிரிப்பது எந்த வகையிலும் தீர்வுக்கான ஒரு வழியாக அமையாது.

சிங்களவர்களின் வாக்குகளைப் பெறும் நோக்கில் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியில் இருந்து 'முஸ்லிம்' என்ற சொல்லை நீக்கிவிட்டு தேசிய காங்கிரஸ் என்ற பெயரில் கட்சியை மாற்றியமைத்து அரசியல் நடத்திவரும் அமைச்சர் அதாவுல்லா எப்படி முஸ்லிம்களின் தேவைபற்றிச் சிந்திக்க முடியும்?

அதேபோல், கிழக்கில் ஆதிக்கம் செலுத்தும் நோக்கில் ஜே.வி.பியினரும் இந்த விடயத்தில் மூக்கை நுழைத்து வடக்கு - கிழக்கைப் பிரிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இது முஸ்லிம்களுக்கு ஆபத்தாகவே அமையும் - என்றார். (உ)

## வெடிபொருள்கள் மீட்பு

மட்டக்களப்பு, ஆரையம்பதியில் நேற்று முன்தினம் கிளைமோர் குண்டு உட்படப் பெருமளவு வெடிபொருள்களைப் பொலிஸார் கைப்பற்றியிருக்கின்றனர்.

அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்று படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.(த)

## முஸ்லிம் சம்மேளனம் நாளை கூடுகிறது

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முஸ்லிம் சம்மேளனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயவென கூட்டமொன்று நாளை புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு கொழும்பில் உள்ள மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானாவின் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த புதன்கிழமை ஆளுநரின் காரியாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இக்கூட்டம் நடத்துவது பற்றித் தீர்மானம் எடுக்கப்பட்டது. (க)


சூரியனின்
அரங்கம்!
இன்று முதல்
உங்களைத் தேடி!
அரங்கம் - திங்கள் முதல் வியாழன் வரை
இரவு 9.00 மணிக்கு
SHERLOCK HOLMES
சூரியன் FM
SOORIYAN FM
103.2 FM 97.3 FM 97.9 FM 93.0 FM

# மின்வெட்டை எதிர்கொள்ள தயார் நிலையில் இருங்கள்!

## வன்னி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்

பரந்தன்,ஓக.1

வன்னிப் பெருநிலப்பரப்பில் செயற் பட்டு வரும் மருந்து மற்றும் உணவு நிலையங்கள் மின்வெட்டை எதிர்கொள்ளக்கூடிய வகையில் மாற்று ஏற்பாடுகளைத் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும்- அவ்வாறு தயார்நிலையில் இல்லாதவர்கள் குளிரூட்டல் மூலம் பேணும் மருந்துகள், உணவு வகைகளை விற்பனை செய்யமுடியாது என்றும் தமிழீழ சுகாதார சேவைகள் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

தமிழீழ சுகாதார சேவைகள் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் மின்சார வெட்டுக்களால் குளிரூட்டியில் பாதுகாக்கப்படும் மருந்துகளும் உணவுகளும் பழுதுபடும் சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, குளிரூட்டிப் பயன்படுத்தும் மருந்து, உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்கள் மின்வெட்டுக்களை எதிர்கொள்ள மாற்றுமின் விநியோகத்திற்கான மின்பிறப்பாக்கிகள் அல்லது சூரிய மின்கல வசதியினைத் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அவ்வாறு தயார்நிலையில் இல்லாதவர்கள் குளிரூட்டல் மூலம் பேணும் மருந்துகள், உணவுவகைகள் என்பனவற்றை விற்பனை செய்ய முடியாது என்பதை அவர்களது கவனத்திற்கு அறியத்தருகின் றோம்- என்றுள்ளது. (352)

## 'பற்களைப் பாதுகாப்போம்' ஒளிப்பேழை வெளியீடு

'பற்களைப் பாதுகாப்போம்' ஒளிப்பேழையின் வெளியீட்டு விழா நேற்றுமுன் தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நோர்வேத் தமிழர் நலவாழ்வு நிறுவனத்தினரால் உருவாக்கப்பட்ட இந்த ஒளிப்பேழையை கிளிநொச்சி நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

பற்கள் தொடர்பான சுகாதாரம், பற்களைப் பாதுகாக்கும், சுத்தம் செய்யும் முறைகள், பற்கள் தொடர்பான நோய்கள் என்பவற்றை உள்ளடக்கி இந்த ஒளிப்பேழை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

# தமிழரின் விடுதலைச் சிந்தனையை மழுங்கடிக்கும் முயற்சிகள் தோல்வி

## தூயவன் கல்லூரி அதிபர் கருத்து

கிளிநொச்சி,ஓக.1

தமிழ்மக்களுடைய விடுதலைச் சிந்தனையை மழுங்கடிக்கலாம் என்ற நோக்கில் ஸ்ரீலங்கா அரசும் அதன் படைகளும் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளும் தோல்வி கண்டுள்ளன என்று தூயவன் அரசறிவியற் கல்லூரியின் அதிபர் அரசண்ணா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வட்டக்கச்சி தமிழவன் பயிற்சிப் பாசறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவடிப் பிரதேச மக்களுக்கான கட்டுமானப் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழக் கலவன் பாடசாலை மைதானத்தில் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் சுரேன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மக்களுடைய நிலங்களைக் கைப்பற்றவேண்டும். அவர்களுடைய தாயகக் கோட்பாடு சிதைக்கப்படவேண்டும். அவர்களுடைய விடுதலைச் சிந்தனை மழுங்கடிக்கப்படவேண்டும் என்ற வகையில்தான் ஸ்ரீலங்கா அரசின் சகல செயற்பாடுகளும் நிகழ்ந்தேறி வருகின்றன.

ஆனால், இதற்கு மாறான நிலைமைதான் தாயகத்தில் இருக்கிறது. விடுதலைதான் தமிழ் மக்களுடைய தாகமாக இருந்து வருகின்றது. அது இன்னமும் வலுப்பெற்றுக் கொண்டே இருக்கிறது- என்றார்

நிகழ்வில் பொதுச்சுடரை தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர் அரசண்ணா ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை கல்லூரியின் பொறுப்பாளர் புலிமறவன் ஏற்றி வைத்தார்.

சிறப்புரைகளை கல்லூரிப் பொறுப்பாளர் புலிமறவன், கல்லூரி முதல்வர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து பயிற்சிகளின்போது நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும், பயிற்சி சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதில் 300இற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் பயிற்சியை நிறைவுசெய்துள்ளனர்.

## சீரற்ற நீர்ப்பாசனத்தால் பயிர்கள் எரிந்து நாசம்

கிளிநொச்சி,ஓக.1

கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து நீரைப் பெற்று சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டவர்களின் நெற்பயிர்கள் போதிய நீரைப் பெறாமையால் எரிந்து நாசமாகியுள்ளன.

பன்னங்கண்டி திட்ட உப குழுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கையே சீரற்ற நீர்ப்பாசனத்தால் அழிந் துள்ளது.

இரணைமடுக் குளத்திலிருந்து இவ்வயலுக்கு ஆரம்பத்தில் ஒழுங்காக நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தற்போது சீரற்றிருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# வன்னிச் செய்திகள்

## காவல்துறையின் வீதி ஒழுங்கு நடவடிக்கையால் மக்கள் திருப்தி

பரந்தரன்,ஓக.1

புதுக்குடியிருப்புப் பிரதேச காவல்துறையினர் வீதி ஒழுங்கு நடவடிக்கையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழீழ காவல்துறையினரின் துரிதமான வீதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் நன்மையடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான வீதிக்கண்காணிப்புகளில் ஈடுபட்டிருப்பதோடு துவிச்சக்கரவண்டிகளில் அருகருகே பயணிப்பவர்கள் மற்றும் வாகனங்களை அதிவேகமாக ஓட்டுபவர்கள், மதுபோதையில் வாகனங்கள் ஓட்டுபவர்களை இனங்கண்டு உடனுக்குடன் அவர்களுக்கான தண்டப்பணத்தை அறவீடு செய்வதுடன், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் உட்படுத்திவருகின்றனர். இதனால் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வீதிவிபத்துக்கள் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


(352)

## முன்பள்ளி அபிவிருத்தித் திட்டம்: பெற்றோர் சந்திப்பும் கருத்தூட்டலும்

முன்பள்ளி அபிவிருத்தி ஆண்டை ஒட்டி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் தனது பராமரிப்பிலுள்ள முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இதன் ஓர் அங்கமாக முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கான சந்திப்பை நடத்தி வருவதோடு கருத்தூட்டல் நிகழ்வுகளையும் புனர்வாழ்வுக் கழகம் நடத்தி வருகின்றது.

வரவுகுன்றிய சிறார்களின் பெற்றோர்களை வீடுகளில் சந்திப்பதன் மூலம் சிறார்களின் வருகையை உறுதிப்படுத்தும் திட்டத்தையும் கழகம் முன்னெடுத்து வருகிறது. அத்துடன் பூநகரி, முழங்காவில் அபிவிருத்தி நிறுவனப் பணியாளர்கள் வீடியோ படம் மூலம் கார்ட்டூன் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி சிறுவர்களின் கல்விக்கு ஊக்கமளித்து வருகின்றனர்.

(415)



முன்பள்ளி அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அங்கமாக வீடியோப் படம் காண்பிக்கப்படுவதையும் மாணவர்கள் படத்தை ஆர்வத்துடன் பார்ப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: வெள்ளாங்குளச் செய்தியாளர்)*

## மாணவர் அமைப்பின் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஓக.1

நெடுங்கேணி கோட்ட பாடசாலைகளின் மாணவர் அமைப்பின் கலந்துரையாடல் கடந்த 21ஆம் திகதி கனகராஜன்குள கோட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ம.பிறேம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை நெடுங்கேணி ம.வி. அதிபர் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை நெடுங்கேணிப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.பிறையன் ஏற்றி வைத்தார்.

கருத்துரைகளை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.சுபாஸ், நெடுங்கேணி ம.வி. அதிபர், முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் மயூரன் உட்பட பலர் நிகழ்த்தினர்.

## ஒருகோடி 60 லட்சம் ரூபா செலவில் மன்னாரில் கோழிப் பண்ணை

மன்னார், ஓக.1

பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களின் சுய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகம் ஒரு கோடியே 60 லட்சம் ரூபா செலவில் கோழி வளர்ப்புத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படவுள்ள இத் திட்டத்தின் மூலம் தொடர்ச்சியாக நல்ல இனக்கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளதுடன் கோழி வளர்ப்புத் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளும் நடத்தப்படவுள்ளன.

பாப்பாமோட்டைக் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட 75 பயனாளிகளுக்கு கோழி வளர்ப்புத் தொடர்பான பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி ஆண்டாங்குளத் திலுள்ள மாதி ரிப் பண்ணையில் ஐ.எல்.ஓ. நிறுவன திட்டக்கள அலுவலர் நியூனன்ஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் மரிய நாயகம் குரூஸ் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை மன்னார் மாவட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன் ஏற்றி வைத்தார்.

கருத்துரைகளை பசுமைப் புரட்சி நிறுவன இணைப்பாளர் ஞானம், மன்னார் மாவட்டப்பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் ஜசிகரன், பாப்பாமோட்டைக் கிராம அலுவலர், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர், இளையோர் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஆகியோர்நிகழ்த்தினர்.

தொடர்ந்து கோழிக்குஞ்சு தொடர்பான செய்முறை விளக்கம் முகாமையாளரால் பயனாளிகளுக்கு நிகழ்த்தப்பட்டதுடன் வைபவரீதியாக கோழிக்குஞ்சுகள் உரிய கொட்டகைகளில் விடப்பட்டது. • (202)

## கழிவுகள் கொட்டப்படுவதால் கிராம மக்கள் பெரும் கஷ்டம்

புதுக்குடியிருப்பு, ஓக.1

முள்ளியவளை கயடடை பிரதேசத்தில் தொடர்ந்து கழிவுகள் கொட்டப்படுவதால் கிராம மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

கிராமத்தில் வீதியோரங்களில் கழிவுகள் கொட்டப்படுவதால் அவ் வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்கின் றனர். கழிவுகள் துர்நாற்றம் வீசுவதோடு பெரும் சுகாதாரக் கேடாகவும் அமைந்துள்ளது.

இது தொடர்பாக பிரதேச வாசிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் கூறியும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(353)

## செம்மலை கிழக்குகிராமத்தில் ஆரம்ப பாடசாலை வேண்டும்

புதுக்குடியிருப்பு,ஓக.1

செம்மலை கிழக்கு கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை ஒன்று அமைத்துத் தருமாறு அப் பகுதி கிராமமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் இங்கு வருகை தந்த தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்தோர் பாடசாலை ஆரம்பிப்பது தொடர்பாக உறுதியளித்த போதும் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

ஏற்கனவே நாயாறு கிராமத்தில் பாடசாலை ஒன்று இருந்தது அது தற்சமயம் மூடப்பட்டுள்ளது. இதனால் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் செம்மலை மகாவித்தியாலயத்துக்கு சிறுவர்கள் நடந்தே செல்கின்றனர். இதனால் உரிய அதிகாரிகள் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுள்ளனர்.

(353-202)

## தவறிவிட்டது

MP-JS - 6411 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் பதிவுப்புத்தகம், வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன உடுவிலுக்கும் யாழ். நகருக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: சமுர்த்தி வங்கிச் சங்கம், கே.கே.எஸ். வீதி, இணுவில். (52731) (24-14)

## சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

எமது நிலையத்தால் 30.07.2006இல் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 21.10.2006ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றோம்.

ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (52807)

நிர்வாகத்தினர்.

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, உதயன், சுடரொளி நாளிதழ்கள் இணைந்து நடத்தும் கற்றல், கற்பித்தல் தர உள்ளீடுகள் ஆக்கத்திறன் போட்டி 2006

உதயன் சுடர் ஒளி

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி வகுப்புகளில் கற்றல், கற்பித்தல் தர உள்ளீடுகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, உதயன், சுடரொளி நாளிதழ்கள் இணைந்து யாழ்.மாவட்ட பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களிடையே கற்றல் - கற்பித்தல் தர உள்ளீடுகள் ஆக்கத்திறன் போட்டி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளன.

1. போட்டி நடைபெறும் இடம் :- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
2. காலம் :- 07.09.2006
3. போட்டியில் பங்குபற்றத் தகுதியானோர்:
   - 3.1. யாழ்மாவட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள்
   - 3.2. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பக் கல்வி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் (யாழ்.மாவட்டம்)
   - 3.3. ஆசிரியர் கலாசாலையின் (கோப்பாய், பலாலி) ஆரம்பக்கல்வி ஆசிரிய பயிலுநர்கள்
   - 3.4. யாழ்.மாவட்ட பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள்

4.விண்ணப்பிக்கும் முறை:

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அல்லது, உதயன் பணிமனையில் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தினை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி பாடசாலை அல்லது கல்லூரி அதிபரூடாக இணைப்பாளர், கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு மையம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, த.பெ.இல.01, கோப்பாய் என்னும் முகவரிக்கு 07.08.2006ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "கற்றல் கற் பித்தல் தர உள்ளீடுகள் ஆக்கத்திறன் போட்டி- 2006" எனக் குறிப்பிடுதல் அவசியமானது.

5. நிபந்தனைகள்:

★ ஆக்கங்கள் அனைத்தும் ஆரம்பக்கல்வித் துறைசார் தொனிப் பொருளுடையதாக இருத்தல் வேண்டும்.
★ 3.4இல் குறிப்பிடப்பட்ட போட்டியாளர்களது ஆக்கங்கள் யாவும் ஆரம்பக்கல்வி ஆங்கில பாடத்தை மட்டுமே மையமாகக் கொண்டிருத்தல்வேண்டும்.
★ ஒவ்வொரு ஆக்கமும் குறிப்பிட்ட ஆசிரியரால் ஆக்கப்பட்டது என்பதை பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்வேண்டும்
★ போட்டி நடைபெறும் திகதியன்று போட்டியாளர்கள் தமது ஆக்கங்களை தமக்கென ஒதுக்கப்படும் இடங்களில் உரிய நேரத்திற்கு காட்சிப்படுத்தவேண்டும்.
★ தேவைப்படுமிடத்து ஆக்கங்கள் தொடர்பான விளக்கங்களை போட்டியாளர்களே வழங்கவேண்டும்
★ ஒவ்வொருவருடைய ஆக்கங்களின் பாதுகாப்புக்கும் உரியவர்களே பொறுப்புடையவர்கள்
★ மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதியானது.


**குறிப்பு:** போட்டியாளர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களைக் காட்சிப்படுத்தமுடியும்.

ஆக்கங்கள் தயாரித்தல் முதல் காட்சிப்படுத்தல் வரையில் சகல ஏற்பாடுகளையும் போட்டியாளரே மேற்கொள்ளவேண்டும். இது தொடர்பில் எந்தவிதப் படிகளும் வழங்கப்படமாட்டாது.

நிர்வாக இயக்குநர், உதயன் - சுடரொளி நாளிதழ்கள். | இணைப்பாளர் க.க.த.உ. மையம் | பீடாதிபதி, யா.தேசிய கல்வியியற் கல்லூரி.





நீர்வேலியில் திருமுருகன் கல்யாண மண்டபம் மற்றும் பல்பொருள் அங்காடி ஆகியவை அடங்கிய கட்டடத் தொகுதி அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் நீர்வை மணி கு.தியாகராச குருக்களும் இணைந்து திருமண் மண்டபத்தைத் திறந்து வைப்பதை முதல் படத்திலும் கொமர்ஷல் வங்கி யின் யாழ். முகாமையாளர் ஏ.எம்.ஏ. குபேரகுலேந்திரன் பல்பொருள் அங்காடியைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட 'அருள் மணம் கமழும் திருமணச் சிறப்புகள்' என்ற நூலின் முதற்பிரதியை கொமர்ஷல் வங்கியின் யாழ். முகாமையாளரிடமிருந்து தொழிலதிபர் பொ.கிருஷ்ணானந்தன் பெற்றுக்கொள்வதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# லயன்ஸ் கழக ஏற்பாட்டில் மக்கள் நலக் கருத்தரங்குகள்

தென்மராட்சி,ஓக.1

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மக்கள் நலக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மீசாலை வடக்கு முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச பற்சிகிச்சை முகாம் மற்றும் பெற்றோருக்கு பற்களை பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருதரங்கு என்பனவற்றை அண்மையில் மீசாலை வடக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தினர்.

சாவகச்சேரி சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை மேற்பார்வை குடும்பநல சேவையாளர் எஸ்.பாலாம்பிகை தலைமையில் குடும்பநல சேவை மாணவர்கள் பற்சிகிச்சைப் பரிசோதனைகளை நடத்தினர்.

முகாமில் கலந்து கொண்ட சிறார்களுக்குப் பற்பசையும், தூரிகையும் வழங்கப்பட்டன. தொடர்ந்து பற்களைப் பாதுகாப்பது குறித்த கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306பி மாவட்ட சுகாதாரம் தொற்று நோய்ப்பிரிவுத் தலைவர் லயன்ஸ் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் த.கிளிஸ்டஸ் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டதாக கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

* * *

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பயிற்சிகள் கருத்தரங்கினை அண்மையில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடத்தினர்.

இக்கருத்தரங்கில் 102 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்டத் தலைவர் லயன் கா.சற்குணதேவன், வலயத் தலைவர் லயன் சி.சிவபால சுப்பிரமணியம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (8-117)


ADMISSIONS OPEN

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே ! அடுத்து என்ன ?

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான வாய்ப்பு
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் கௌரவமான வேலைவாய்ப்பு
- சொந்த மண்ணில் பெற்றோரின் அரவணைப்பில் உயர் கல்வி

பெற்றோர்களே !!

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த ஓர் எதிர்காலத்திற்கான முதலீடு HND

பதிவுகளுக்கு நீங்கள் முந்திக்கொள்ளுங்கள்

BTEC HND

World Class Qualifications

Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

IIS CITY CAMPUS

# 200, Sivan Pannai Road, Jaffna

TP No. : 021 222 8060 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk

Study in India

Brindavan College

affilliated to Bangalore University

with 2 A/L Passes OR Pending A/L Results

Join now for
B.B.M. (Management)
B.C.A. (Computer)
B.Sc. (Science)
Degree Courses & complete your degree in 2009 & save one year

Company Secretarial Services (Pvt) Ltd,
285C- 1/1, Stanley Tilakaratne Mw., Nugegoda,
Tel: 011 2854438/ 0777317043


ஐந்தாம் ஆண்டில் உமை நினைக்கையில்...

மலர்வு 24 ★ 02 ★ 1952



உதிர்வு 01 ★ 08 ★ 2001

அமரர் V.M.ஜெறாட் பீற்றர்சன் (J.P.)

ஐந்தாண்டுகள் ஓடி மறைந்தாலென்ன
ஆயிரம் ஆண்டுகள் கடந்திட்டபோதிலுங்கூட
ஐயானே உமை மறவோம் நாம் என்றும்...

38, சென்.பற்றிக்ஸ் றோட், குருநகர், யாழ்.

பிரிவினால் நினைந்துருகும்: மனைவி, பிள்ளைகள்.

## மரவேலைப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஓக.1

தொழில்துறைத் திணைக்களம் சண்டிலிப்பாய் பிரதேச அலுவலர் பிரிவில் மரவேலைப் பயிற்சி நெறியை நடத்தவுள்ளது.

இப்பயிற்சி நெறியைக் கற்க விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் கேட்டுள்ளார்.

பயிற்சிக்காலத்தின்போது பயிற்சியாளருக்கு ஊக்குவிப்புப் படியும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (8-204)

# துன்னாலை, போதர மடத்தில் சனசமூக நிலையம் அமைப்பு


வடமராட்சி,ஓக.1

துன்னாலை வடக்கு, போதர மடம் கிராமத்தில் சனசமூக நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கையில் அக்கிராம மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

சனசமூக நிலையம் அமைப்பதற்கென அக்கிராம மக்களின் பங்களிப்புடன் ஒரு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலையத்தையும் அதனுடன் இணைத்து பொதுமண்டபத்தையும்அமைக்க 4 லட்சம் ரூபாவை 'போரூட்' நிறுவனம் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் இடம்பெற்றது.

புதிதாக அமைக்கப்படும் போதர மடம் அம்மன் சனசமூக நிலையத்திற்கு உரிய முறையில் அனுமதி வழங்கி அங்கீகரிக்குமாறு நிலையத்தின் செயலாளர் எஸ்.செல்லையா பருத்தித்துறை பிரதேச செயலாளர் சி.பகவதியிடம் விண்ணப்பித்துள்ளார். (173)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கொடியேற்றத்தைக் காண்பதற்காகக் கூடிய பக்தர்களில் ஒரு சாராரைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.1

துர்க்காபுரம் மிருசுவில் படித்த மகளிர் திட்டம் ஸ்ரீ ஞான துர்க்கா அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் தினமும் முற்பகல் 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், விசேட பூசை என்பன இடம்பெறும். எதிர்வரும் 9ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் திருவிழா நிறைவுபெறும். (204)

***

சுழிபுரம்,ஓக.1

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயத்தில் ஆடிச் செவ்வாய் உற்சவம் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற்றுவருகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விசேட, அபிஷேக ஆராதனைகள், கூட்டுப்பிரார்த்தனை என்பன இடம்பெறும். (204-28)

***

சாவகச்சேரி,ஓக.1

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

10 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள உற்சவத்தில் சப்பரத் திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கும் தேர்த்திருவிழா மறுநாள் காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி காலை 8 மணிக்கும் நடைபெறவுள்ளன. (31)

***

யாழ்ப்பாணம்,ஓக.1

கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இந்த ஆலயத்தில் கடந்த 4 ஆண்டுகளாக இடம்பெறாதிருந்த பெருந்திருவிழா மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (204)

***

வலி.வடக்கு,ஓக.1

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வரலட்சுமி விரத விழா எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் வரலட்சுமி விரதத்தையொட்டி விசேட பூசை பிற்பகல் 2 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 3.30 மணிக்கு வரலட்சுமி விசேட பூசை இடம்பெற்று அம்பாள் திருவீதி உலாவரவுள்ளார். (86)

# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழாக்கள்

யாழ்ப்பாணம், ஓக.1

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏழாலை ஆத்மஜோதி மணிமண்டபத்தின் அனுசரணையுடன் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆத்மஜோதி தியான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகாம பிரதேச இந்துகலாசார அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் உடுவில் உதவிப் பிரதேச செயலர் செல்வி மஞ்சுளாதேவி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஆசியுரையை சுன்னாகம் கதிரைமலைச் சிவன் கோயில் குரு சிவப்பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் க.நாகராசா, ஆத்மஜோதி மணிமண்டபப் பொறுப்பாளர் எஸ். முருகையா ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவுகள், சிறார்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (204)

***

யாழ்ப்பாணம்,ஓக.1

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழா நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீசட்டநாதர் சுவாமி ஆலயத்திலும் பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி ஆலயத்திலும் இடம்பெறவுள்ளன. (204)

***

தென்மராட்சி,ஓக.1

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை சாவகச்சேரி சிவன் கோயிலில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களும் சிவன் கோயில் நிர்வாகத்தினரும் இணைந்து இக்குருபூசையை நடத்தவுள்ளனர்.

காலை 8 மணி தொடக்கம் திருமுறை ஓதுதல், மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (204-117)

***

யாழ்ப்பாணம்,ஓக.1

அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலில் நடைபெறவுள்ளது.

விசேட பூசை, அபிஷேகம், புராணப்படிப்பு என்பன இடம்பெற்று சமயகுரவர் நால்வர் திருவீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (204)

## மயில்வாகனம் சுவாமிகள் குருபூசை

வடமராட்சி, ஓக.1

மயில்வாகனம் சுவாமிகளின் 21ஆம் ஆண்டு குருபூசை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மயில்வாகனம் சுவாமிகளுக்கான விசேட பூசையை ஆச்சிரமப் பொறுப்பாளர் அன்னவாரிதி செ.மோகனதாஸ் சுவாமிகள் நடத்துவார்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா மயில்வாகனம் சுவாமிகளின் நினைவுரையையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதன் சிறப்புச் சொற்பொழிவும் நிகழ்த்துவர்.

குருபூசையையொட்டி தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். (173)


## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.1

நல்லூர் பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்துகலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் நடத்தப்பட்டும்வரும் நிகழ்வில் மூன்றாம் நாளான இன்று மாலை 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்ற தலைப்பில் சீ.சசீவனின் சொற்பொழிவும் கோண்டாவில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (203-111)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

## 3ஆம் திருவிழா



### முருகா உன்பதம் சரணடைந்தோம்!

வள்ளி மணவாளனே கந்தா - உன்னை
காணக்கண் போதாது முருகா!
வந்தருள்வாய் எம்முன்னே - முருகா
வரமொன்று தந்திடுவாய் வேலா!
முருகப் பெருமானே வேலா - எம்முன்
மயிலேறி வந்து அருள்புரிவாய் நாதா!
கந்தனே! வேலனே! கடம்பனே!
உன் நின்பதம் நாம் சரணடைந்தோம்!

- கங்கா

### கந்தா சரணம்

சரணம் சரணம் சண்முகா சரணம்
சஞ்சலம் தீர்த்திடும் குருபரா சரணம்
வரணும் வரணும் ஆறுமுகா வரணும்
ஆறுதல் தந்தெம்மைக் காத்திட வரணும்

வெற்றியின் நாயகா வேலை யேந்தியே
வெவ்வினை களைந்திட விரைந்தே வருவாய்
சரணம் சரணம் முருகா சரணம்
சரணம் சரணம் கந்தா சரணம்.

- கிருஸ்ணசாமி கஸ்தனி

### மனதினில் நிறையவேண்டும் குமரா!

மயிலேறி வருகின்ற முருகா - எம்
மனதில் நிறையவேண்டும் குமரா
அடியார்கள் குறைதீர்க்கும் கந்தா
அருள்மழை பொழிய வருவாய் வேலா!

- சாரங்கா

### நல்லூர்க் கந்தன் பொழிவான் அருள்மழை

நல்லூர்க் கந்தன் பெருமைகளை
நாவால் நவில இயலாதே
இல்லை அவன்போல் ஒருதெய்வம்
எமக்கு எல்லாம் அவன்தானே
செல்லர் யோகர் என்றுபலர்
சேர்ந்தார் அவனின் திருவடியே
பொல்லா வினைகள் போக்கிடுவான்
பொழிவான் அருளாம் மழைதனையே.

- கவிஞர் வ.யோகானந்தசிவம்

### உன்னைத் தொழுதுய்வேன்

அருணகிரியின் திருப்புகழில் முருகன்
அழகெழில் கோலம் கண்டேன்
கச்சியப்பன் பாட்டதிலே கந்தன்
கம்பீரக் காட்சி கண்டேன்.

நல்லைக் குமரன் நாமம் சொல்ல
தொல்லை வினைகள் தீரக்கண் கண்டேன்
நம்மவர் துன்பமெல்லா மவனருளால்
தூரவிலகி ஓடக்கண்டேன்.

தேரடி செல்லப்ப முனியுரைத்த உண்மை
''ஒருபொல்லாப்புமில்லை''யென உணர்ந்தேன்
தேறினேன் சித்தம் தெளிந்தேன் தினம்
உன்னைத் தொழுதுய்வேன்.

- நயினையான்

விழா சிறப்புற
வாழ்த்துவோர்:

இலங்கையின் முதல்தர தேயிலையான
GREEN MOUNTAIN TEAயின்
ஏகவிநியோகஸ்தர்

S.M.S. WORLD (pvt)

No. 291, பிறவுண் றோட்,
கலட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P.: 021 4590807

(A/50017) (24-19-14)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

மீசாலை - கண்டி வீதி 'A9' அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி வே.தவத்துரை, கனகசுந்தரம் வீதி, மீசாலை மேற்கு, மீசாலை. (52805)

## தவறிவிட்டது

உரும்பிராய் தெற்கு, சிவகுல வீதியைச் சேர்ந்த வெற்றிவேலாயுதபிள்ளை விதுசன் என்பவரின் தேசிய அடையாள அட்டையும் மற்றும் விசேட அடையாள அட்டையும் தங்கராசா வியாழம்மா என்பவரின் தேசிய அடையாள அட்டையும் யாழ்ப்பாணத்திற்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சிவசக்தி ஸ்ரோர்ஸ், உரும்பிராய் சந்தி. T.P.: 077 9124011, 077 6194374. (சி/50596)

## ஒத்துமாறல்

திருகோணமலை தேசியப் பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் கல்வியியற் கல்லூரி கணித ஆசிரியர் ஒருவர் யாழ்.மாவட்ட தேசியப் பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகின்றார். தொடர்புகளுக்கு:
(52811) 0776180329, 0785109425

## தேவை

பெனிசுலா கொலிடே ரெஸ்ட (Penisula Holiday Rest) இற்கு அனுபவம் உள்ள திறமையான சைனிஸ் உணவு தயாரிக்கக் கூடியவர்கள் (Chenis Cooker) தேவை. அத்துடன் (Western Cooker) மேலைத்தேய சமையல் தெரிந்திருப்பது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
281 கண்டி வீதி, யாழ்ப்பாணம்
[புங்கன்குளம் சந்தி அருகில்].
T.P.: 021 4590374, 077 6102405
(52822)

# பருத்தித்துறையில் மத்தியஸ்தர் சபை

வடமராட்சி,ஓக.1

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்கான மத்தியஸ்தர் சபை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடத்தப்படும் எனவும்-

உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதும் சபை அங்குரார்ப்பணம் செய்யும் நடவடிக்கை இடம்பெறும் எனவும்- பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (204-173)

# அபிவிருத்திப் பணியின்றி கல்விளான் கிராமம்

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/170 கல்விளான் கிராமத்தில் இது வரை எவ்வித அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என இக்கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் 68 குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களுக்கான அடிப்படை வசதிகள் இன்னும் அரச அதிகாரிகளால் இனங்கண்டு பூர்த்தியாக்கப்படவில்லை. இது குறித்து அரச அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப் படவுள்ளது என இப்பகுதி மக்களின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (204-95)


# 100 ஆவது பிறந்த தின வாழ்த்துகள்



மாணிக்க ஆச்சி நீர் மனிதருள் மாணிக்கம்
மாநிலம் மீது நீர் மேன்மேலும்
வாழ்க! வாழ்க!
நல்லூர், கலைமகள் வீதியைச் சேர்ந்த

## திருமதி கந்தையா மாணிக்கம்

அவர்கள் தனது 100ஆவது பிறந்த தினத்தை இன்று (01.08.2006) செவ்வாய்க்கிழமை மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள், உறவினர்கள் ஆகியோருடன் தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரைப் பேரப்பிள்ளைகளான குணரத்தினம் (சுவிஸ்), றோகினி (கனடா), பூட்டன் சிவசேயோன் (கனடா), யமுனாராணி குடும்பம் ஆகியோர் நீண்ட ஆயுளுடன் வாழவேண்டுமென சிறப்பாக வாழ்த்துகிறார்கள்.

No. 1262, 3ஆம் கட்டை,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

தகவல்:
த.சிவபாக்கியநாதன்.
(52741)


# வடமராட்சியில் கால்நடை திருட்டு அதிகரிப்பு

கரவெட்டி, ஓக.1

வடமராட்சிப் பிரதேசத்தில் மேய்ச்சலுக்காக விடப்படும் கால்நடைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் வீடுகளில் வளர்க்கப்படும் கால்நடைகள் மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்படுவது வழக்கம். அவ்வாறு மேய்ச்சலுக்காக விடப்படும் கால்நடைகள் தற்போது காணாமற்போகின்றன என்று கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி இப்பகுதி வீடுகளில் கட்டி வளர்க்கப்படும் கால்நடைகளும் காணாமற் போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து கால்நடைகள் திருட்டுப் போவதைத் தடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (204-70)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஜெ.வரதராஜா அவர்களின் அன்புத் தாய்
திருமதி கனகலிங்கம் இராசமணி

அவர்கள் 28.07.2006 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். இவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. - பாடசாலைச் சமூகம்
(52815)(21-32-17-11)

## துயர் பகிர்வு

எமது கல்லூரி ஆசிரியர் த.தவசேகர்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி தளையசிங்கம் சந்திரலீலா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர், உறவினர் அனைவருக்கும் எமது கல்லூரிச் சமூகத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி. (52810) (32-17-11) ஆசிரிய வட்டம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
பிறிற்றோ
அந்தோனியாப்பிள்ளை
(இராசமணி)

தோற்றம் 1925-06-30
மறைவு 2006-07-02

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்புத் துணைவியாய்
பாசமிகு அன்னையாய் நேசமுள்ள மாமியாய் அன்புச்
சகோதரியாய் பாசமுள்ள பாட்டியாய், நேசமுள்ள பூட்டியாய்
வாழ்ந்து மண்ணிலே மறைந்தாலும் எம் மனக்கண்முன்
என்றும் நீங்காது நிலைத்து நிற்கும்
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் இன்று (01-08-2006) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கும் நோர்வேயில் ST.OLAD தேவாலயத்திலும் கொழும்பு லூசியஸ் தேவாலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

எங்கள் குடும்பத் தெய்வத்தின் மறைவைக் கேட்டு மரணச் சடங்கில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், மலர் வளையம் சாற்றியோர், இன்னும் எங்கள் துயரில் பங்குகொண்டு பல வழிகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எம் இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

6/7, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (52520) (21-32-11-17) குடும்பத்தினர்.

# புத்தூர் முன்பள்ளிக்கு 'நிக்கொட்' உதவி

நல்லூர், ஓக.1

புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலைய முன்பள்ளிக்கு 'நிக்கொட்' நிறுவனம் உணவல்லாத பொருள்களை வழங்கியுள்ளது.

முன்பள்ளி சிறார்களுக்கான தளபாடங்கள், நீர்த்தாங்கி, விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றையும், பயன்தரும் மரக்கன்றுகளையும் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி சனசமூக நிலைய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு 50 அடி நீளமான தகரக் கொட்டகை ஒன்றும் வழங்கப் பட்டதாகவும் கூறப்பட்டது. (204-11)

# கரவெட்டியில் மரக்கன்று நடுகை

வடமராட்சி, ஓக.1

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவியுடன் சூழல் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு மரக்கன்றுகள் நடுகைத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது என கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

திட்டத்துக்கான வரைபுகள் தயாரிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் -

நிதி உதவி கிடைத்ததும் மரநடுகைச் செயற்றிட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (204-173)

# வேலணை கோட்ட ஆங்கிலதினப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக1

வேலணை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் நேற்றைய தினம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு பின்னர் தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று நடைபெறுகின்றன.

இப்போட்டியில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெறும் மாணவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற விருக்கும் வலய மட்ட ஆங்கிலதினப் போட்டிகளில் கலந்துகொள்வர் என கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆர்.தில்லைநாதன் தெரிவித்தார். (204)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01 - 07 - 1965



விண்ணில் 01 - 08 - 2003

திருமதி ஜெயராணி வரதராஜா
(ஆசிரியர், யா/கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்)

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவு
மாங்கலியம் தந்தவரை
மறந்துதான் போனதெங்கே?
ஏங்குகிறேன் உங்கள் முகம் காண
என்றும் உம் நினைவுடன்...

துர்க்கா மில் அருகில்,
மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். கணவர், குடும்பத்தினர்.
(52816)(32-17-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
முருகன் கிருஷ்ணபிள்ளை
(ஆரோன்)
(ஓய்வுபெற்ற அதிபர்,
யா/காரை.ஊரி. அ.மி.த.க. பாடசாலை)



தோற்றம் 19-11-1934
மறைவு 01-07-2006

நம்பத்தான் முடியவில்லை
நாள்களோ 31 ஆனது
எத்தனை நாள்கள் தான் ஆனாலும்
உமது நினைவுகள் எமைவிட்டுப்
போகுமா?

கடந்த 01.07.2006 சனிக்கிழமை அன்று கர்த்ருக்குள் நித்தியடைந்த எமது தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு இல்லத்துக்கு வந்து எமக்கு ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (01.08.2006) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் நன்றி ஆராதனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பாலாவோடை,
காரைநகர். (52818)(32-17-11) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி ஸ்ரீபதி சுந்தரவதனி



கந்தர்மடம், பழம் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீபதி சுந்தரவதனி 30.07.2006 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் நயினாதீவு சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதியின் அன்பு மனைவியும் விபூஷிதா, நிசேவிதா ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பரிபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் தம்பையா - செல்லக்கண்ணு தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2006) புதன் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கை சுங்கத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
T.P.: 2935
(52817)(32-17-11)

தகவல்:
பூ.சந்திரகுமார்,
மணியர்பதி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

# பஹ்ரைனில் மூன்று மாடிக் கட்டடத்தில் தீ! தமிழகத் தொழிலாளர்கள் 16 பேர் பலி!!

## 11பேர் படுகாயம் அடைந்தனர்

மனாமா, ஓக.1

**பஹ்ரைன் தலைநகர் மனாமாவில் மூன்று மாடிக் கட்டடத்தில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5மணிக்கு பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த 16 கட்டுமானத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்;11 பேர் காயமடைந்தனர்.**

இறந்த தொழிலாளர்களில் பெரும்பால னாவர்கள் தீ விபத்தில் ஏற்பட்ட பெரும் புகையால் மூச்சுத் திணறி பரிதாபமாக இறந்தனர். மின் கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள அக் கட்டடத்தின் இரண்டாவது மாடியில் பெரும்பாலும் இந்தியாவைச் சேர்ந்த தொழிலாளர்கள் வசிக்கின்றனர். இங்குதான் தீ விபத்து ஏற்பட்டது. பொலீஸ் தரப்பில் அங்கு 218 பேர் வசித்ததாகவும் தொழிலாளர்கள் தரப்பில் 350 பேர் வசித்ததாகவும் அவர்கள் அனைவரும் இந்தியர்கள் என்றும் கூறப்படுகிறது.


காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிர் தப்பிக்க கண்ணாடி ஜன்னலை உடைத்துவிட்டு அங்கிருந்து குதிக்க முயன்றதில் கை எலும்பு முறிந்தவரும் சிகிச்சை பெற்று வருகிறார். அனைவரும் அபாயக் கட்டத்தை கடந்து விட்டனர்.

தீ விபத்து ஏற்பட்ட பகுதியை மூத்த அமைச்சர்களுடன் நேரில் பார்வையிட்டார் பஹ்ரைன் பிரதமர் ஷேக் கலிபா பின்சல்மான் அல் கலிபா. ஆழ்ந்த இரங்கலை இந்திய அரசுக்கு தெரிவித்துக்கொண்ட அவர், இது போன்ற விபத்து எதிர்காலத்தில் நேரிடாது தடுப்பதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு மூத்த அமைச்சர்களை கேட்டுக் கொண்டார்.

தொழிலாளர்கள் அனைவரும் றோயல் ரவர் கட்டுமான நிறுவனப் பணியாளர்கள் என்று பஹ்ரைனின் இந்தியாவுக்கான தூதர் பாலகிருஷ்ண ரெட்டி தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

பெரும்பாலான தொழிலாளர்கள் மூச்சுத் திணறி இறந்துள்ளனர் .மற்ற தொழிலாளர்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்த கட்டடத்தில் வசித்தவர்கள் நெருக்கமான மற்றும் காற்றோட்டம் இல்லாத சுகாதாரக் கேடான அறைகளில் வசித்துள்ளனர். ஊழியர்களின் பாதுகாப்பு குறைபாடு குறித்து கடந்த ஜனவரியிலேயே சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்றார்- பாலகிருஷ்ண ரெட்டி. (8)



பஹ்ரைன் தீ விபத்தில் காயப்பட்டவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுவதைப் படங்களில் காணலாம்

## யூத மையத்துக்குள் துப்பாக்கிதாரி சூடு!

நியூயோர்க்,ஓக.1

அமெரிக்காவிலுள்ள யூத மையத்துக்குள் புகுந்த துப்பாக்கிதாரி ஒருவர் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டதில் ஒரு பெண் உயிரிழந்தார்; 5 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 2 பேர் பெண்கள். அவர்களில் ஒருவர் 5 மாத கர்ப்பிணி.

வாஷிங்ரன் சீட்டிலில் யூத மையம் உள்ளது. லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை ஆதரித்து இம் மையம் கடந்த வாரம் ஊர்வலம் நடத்தியது.

இந்த மையத்துக்குள் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு மர்ம மனி[illegible]தா நுழைந்தார். "நான் அமெரிக்க [illegible]லிம். இஸ்ரேலின் மீது நான் [illegible]கோபமடைந்துள்ளேன்" என்று கூச்சலிட்டவாறே தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அவர் சரமாரியாகச் சுட்டார். பின்னர் அவர் பொலீ ஸில் சரணடைந்தார். (8)

## 10 கோடிரூபா மதிப்புள்ள அதி நவீன 'செல்போன்'

ரஷ்யாவில் 10 கோடி ரூபா மதிப்பிலான நவீன கலைநயமிக்க வைரங்கள் பதிக்கப்பட்ட 'செல்போன்' உருவாக்கப்பட்டுள்ளது.

மொஸ்கோவைச் சேர்ந்த பீற்றர் அலோஸ்சன் என்பவர் இதை வடிவமைத்துள்ளார். இதில் பதிக்கப்பட்டுள்ள 50 'வைரங்கள் குறிப்பாக விலைஉயர்ந்த 'புளூ' வைரங்களாகும். மேலும் இதன் பிற்பகுதிகள் சிவப்பு கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

அனைத்து புதிய தொழில்நுட்ப வசதிகளையும் உள்ளடக்கிய சிறப்புப் பாதுகாப்பு அம்சங்களுடன் இந்த 'செல்போன்' த[illegible]ரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மதிப்பில் இதன் விலை 10 கோடி ரூபாவாகும். இந்தச் செல்போன் மூலம் கடத்தல்காரர்கள், பிளாக்மெயில் செய்பவர்கள், நிதிமோசடி செய்பவர்கள்,லஞ்ச மோசடியில் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து வைத்து புலனாய்வு செய்ய முடியும். (8)

## உடனடி போர்நிறுத்தம்: பாப்பரசர் வலியுறுத்தல்

மத்திய கிழக்கு நாடுகளில் பேச்சுவார்த்தை மூலம் அமைதியை ஏற்படுத்தவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் உடனடி போர்நிறுத்தம் ஏற்படவேண்டும் என பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற் கூறியுள்ளார்.இத்தாலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு முன்னதாக அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிலையில் பிரிட்டிஷ் வெளியுறவுத் துறைச் செயலாளர் மார்க்கிரட் பெங்கட் கூறுகையில், லெபனானின் கானா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 51 பேர் இறந்தனர். இது கண்டனத்துக்குரியது.

இஸ்ரேல் நடுநிலைமையுடன் செயற்படவேண்டும் என தொடர்ந்து பிரிட்டன் கோரி வருகிறது - என்றார். (8)

# பிச்சை எடுப்போரின் கை, கால்களை துண்டிக்கப் பணம் பெற்ற டாக்டர்கள்

## டில்லியில் பெரும் பரபரப்பு

புதுடில்லி,ஓக.1

அனுதாபம் சம்பாதித்து பிச்சை எடுக்க விரும்பும் பிச்சைக்காரர்களின் கை, கால்களை துண்டித்து பணம் சம்பாதித்த டாக்டர்கள் குறித்து ஆதாரத்துடன் வெளியான தகவல்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.இது குறித்து புதுடில்லியில் விசாரணை தொடங்கியுள்ளது.பிச்சையெடுத்து சம்பாதிப்பதற்காக குழந்தைகளைக் கடத்தி கை, கால்களை ஊனப்படுத்தும் கும்பல் குறித்து அவ்வப்போது தகவல்கள் வெளியாவதுண்டு.அதுபோல பெரியவர்களும் அனுதாபம் சம்பாதித்து கூடுதலாக பிச்சை எடுப்பதற்காக தங்களை ஊனப்படுத்திக் கொள்வதாகக் கூறப்படுவதுண்டு.

இதுகுறித்து சி.என்.என். - ஐ.பி.என். தொலைக்காட்சி ஒரு புலனாய்வு நடத்தி ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டது. பிச்சைக்காரர்களுக்கு கை, கால்களைத் துண்டிக்கும் மூன்று டாக்டர்களை அது ரகசியமாக வீடியோ படம் எடுத்து அம்பலப்படுத்தியது.

உத்தரப்பிரதேச மாநிலம் காஸியாபாத்தைச் சேர்ந்த அஜய்குமார் அகர்வால், அரவிந் அகர்வால் மற்றும் புதுடில்லியைச் சேர்ந்த பி.கே. பன்ஸால் ஆகியோரே புலனாய்வில் சிக்கிய டாக்டர்கள்.

தொலைக்காட்சி நிருபர்கள் இருவர் பிச்சைக்காரர்களைப் போல இந்த டாக்டர்களை அணுகினர்.அவர்களிடம் தங்கள் கை, கால்களை துண்டிக்க வேண்டும் எனக் கேட்டனர். கை, கால்களை எளிதில் துண்டிக்கலாம் எனவும், அதற்காக 20 ஆயிரம் ரூபா பெறுவதாகவும் டாக்டர்கள் கூறினர்.

பிச்சைக்காரர்களைப்போல நடித்த நிருபர்களிடம் டாக்டர்கள் பணம் பெறுவது ரகசிய கமராவால் படம் பிடிக்கப்பட்டது. இந்தச் செய்தி ஒளிபரப்பப்பட்டவுடன் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. காஸியாபாத்தில் உள்ள டாக்டர் அஜய்குமார் அகர்வாலின் வீட்டுக்குமுன் திரளான மக்கள் கூடிவிட்டனர்.

அரசு மருத்துமனை டாக்டரான அவர் மீதான குற்றச்சாட்டை விசாரிக்கும்படி தலைமை டாக்டருக்கு காஸியாபாத் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். மற்றொரு டாக்டரான அரவிந்த் அகர்வால் தலைமறைவாகி விட்டார்.

அதேசமயம் புது டில்லியில் உள்ள பழைய ராஜிந்தர் நகரில் கிளினிக் நடத்தும் டாக்டர் பி.கே. பன்ஸாலிடம் பொலீஸார் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

இந்திய டாக்டர்கள் சங்கத்தின் தலைவரான சஞ்சீவ் மாலிக் இவர்கள் மூவரினதும் உறுப்பினர் பதவியை ரத்துச்செய்வதாக அறிவித்தார். இவர்களுடைய நடவடிக்கை காட்டுமிராண்டித்தனமானது என அவர் கூறியுள்ளார். (8)

# கைதிகள் வாழ்க்கை குறித்து அறிய சிறைவாசம் காணும் மாணவர்கள்

கைதிகள் வாழ்க்கை குறித்து நேரில் அறிய இரண்டு நாள் சிறைவாசம் அனுபவிக்க உள்ளனர் மலேசியப் பல்கலைக்கழகச் சட்டத்துறை மாணவர்கள்.

20 முதல் 24 வயதுக்குட்பட்ட 84 மாணவர்கள் அடுத்தவாரம் மலேசியாவின் மிகப் பழைமையான டிபங்ட் சிறையில் இந்த அனுபவத்தைப் பெறவுள்ளனர். சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் சட்ட அமைப்பு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதுகுறித்து இந்நிகழ்ச்சிக்கான அமைப்பாளர் நஸ்ரூதீன் கூறியதாவது:-

இந்த அனுபவத்தைப் பெறவுள்ள மாணவர்கள் அனைவரும் வருங்காலத்தில் குற்றப் பிரிவில் வழக்கறிஞர்களாகச் செல்ல உள்ளவர்கள். அதனால், சிறையில் உள்ள கைதிகளின் நிலை, அங்கு அவர்களை அதிகாரிகள் நடத்தும் விதம், சிறைக் கலவரங்கள் மற்றும் அவற்றை சமாளித்தல், சிறை ஒழுங்கு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு நிலைமைகளை நேரில் அறியும் வண்ணம் இந் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (8)

# லெபனானின் கானா கிராமம் மீது இஸ்ரேலிய விமானங்கள் குண்டுவீச்சு!

## 22 குழந்தைகள் உட்பட 51 பேர் பலி!!

பெய்ரூட்,ஓக.1

இஸ்ரேல் குண்டுவீச்சில் லெபனானின் கானா கிராமமே நாசமடைந்தது. இதில் 22 குழந்தைகள் உட்பட 51 பேர் உயிரிழந்தனர். கடந்த 19 நாள்களாக நடைபெற்று வரும் தாக்குதலில் ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்தத் தாக்குதல்தான் படுமோசமான தாக்குதல் எனக் கருதப்படுகிறது.

கடந்த 12ஆம் திகதி முதல் லெபனான் மீது இஸ்ரேல் குண்டுவீசி தாக்குதல் நடத்தி வருகிறது. ஹிஸ்புல்லா படையினர் மீது தாக்குதல் நடத்துவதாக கூறிக்கொண்டாலும் லெபனான் முழுவதையுமே சின்னாபின்னமாகச் சிதைத்து வருகிறது. குழந்தைகளும் அப்பாவி மக்களும் உயிரிழக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்களை அனுப்புவதற்காக 72 மணிநேரம் சண்டையை நிறுத்தும்படி ஐ.நா. சபை விடுத்த வேண்டுகோளைக் கூட இஸ்ரேல் நிராகரித்து விட்டது. அதுமட்டுமன்றி, தனது தாக்குதலையும் அது தீவிரப்படுத்தி உள்ளது. ஞாயிற்றுகிழமை இஸ்ரேல் விமானங்கள் லெபனான் கிராமமான கானா மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்தின. இதில் அந்தக் கிராமமே நாசமடைந்தது. 22 குழந்தைகள் உட்பட 51 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதல் போர்க் குற்றமாகும். இதுவரை 500 பேர் கொல்லப்பட்டுள்ளனர். உடனடியாக சண்டை நிறுத்தம் அறிவிக்கவேண்டும். லெபனானில் இஸ்ரேல் நடத்தும் படுகொலைகள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என லெபனான் பிரதமர் புவாட் சினியோரா வற்புறுத்தியுள்ளார்.

## உலக அரங்கில்

# ஐ.நா.பாதுகாப்புச் சபையில் ஈரானை மிரட்டத் தீர்மானம்

ஈரானுக்கு மிரட்டல் விடுக்கும் தீர்மானத்தை ஐ.நா.பாதுகாப்புச் சபையில் பிரான்ஸ் கொண்டு வந்துள்ளது.

யுரேனியம் செறிவூட்டும் திட்டத்தை ஈரான் எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் அரசியல், பொருளாதார தடை விதிக்கப்படும் என்று அந்தத் தீர்மானத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் இந்த மாதத் தலைவர் பிரான்ஸ் தூதர் ஜியான்-மார்க் டிலா சபீர் ஆவார்.


ஐ.நா.உயரதிகாரிகள், ரத்து அதிகாரம் கொண்ட அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளின் சார்பில் நியூயோர்க்கில் உள்ள உயரதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்திய பின்னர் ஈரானுக்கு மிரட்டல் விடுப்பது தொடர்பான தீர்மானத்தை பிரான்ஸ் கொண்டு வந்துள்ளது. இந்த நிலையில் வாக்கெடுப்புக்கு முன்னதாக தீர்மானத்தில் திருத்தம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது என்று பிரான்ஸ் தூதர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இருப்பினும் தீர்மானத்தில் பெரிய திருத்தம் ஏதும் செய்யவேண்டும் என்று ரத்து அதிகாரம் கொண்ட உறுப்பு நாடுகள் விரும்பினால் தீர்மானம் நிறைவேறுவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தீர்மானத்தை ஏற்பதைத் தவிர ஈரானுக்கு வேறுவழியில்லை. இல்லாவிட்டால் பொருளாதாரத் தடையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அமெரிக்கத் தூதர் ஜான் போல்டன் தெரிவித்தார். தீர்மானத்தை ஈரான் மறுத்தால் அது பற்றி விவாதிக்கப்படும் என்று ரஷ்ய தூதர் செர்கின் தெரிவித்தார். தீர்மானத்தை ஏற்று அதன்படி ஈரான் செயற்படும் என்று பிரிட்டிஷ் தூதர் எமிர் ஜோன்ஸ் நம்பிக்கை தெரிவித்தார்.(8)

# முரளிதரனின் பந்துவீச்சில் வீழ்ந்தது தென்னாபிரிக்கா

## இன்னிங்ஸ் மற்றும் 153 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி



கொழும்பு, ஓக.1

இலங்கைஅணியின் சுழல்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனின அபார பந்து வீச்சினால் தென்னாபிரிக்க அணி படுதோல்வியைச் சந்தித்தது. இலங்கை அணி இ ானிங்ஸ் மற்றும் 153 ஓட்டங்களால் வெற்ற பற்றது.

இந்த டெஸ்ட் போட்டியில் முத்தையா முரளிதரன் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணியின் 4 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் ஆறு விக்கெட்டுக்களையுமாக மொத்தம் 10 விக்கெட்டுக்களை 172 ஓட்டங்களைக் கொடுத்து கைப்பற்றினார்.

இது முத்தையா முரளிதரனின் ஒரு போட்டியில் 10 விக்கெட்டுக்களை கைப்பற்றிய 17 ஆவது சாதனையாகும்.

தென்னாபிரிக்க அணி நேற்றுக்காலை கைவசம் இருந்த 6 விக்கெட்டுகளுடன் தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது. நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவின்போது தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் 311 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. அணித்தலைவர் பிரின்ஸ் 60 ஓட்டங்களுடனும் பௌச்சர் 38 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இவர்கள் நேற்றுக்காலை தமது ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த டெஸ்ட் போட்டியை ஒருவாறு சமன் செய்துவிடவேண்டும் என்ற ஆதங்கத்துடன் தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர்கள் களமிறங்கினார்கள். ஆயினும் இலங்கையணியின் நம்பிக்கை நட்சத்திரம் முத்தையா முரளிதரன் மதிய இடைவேளைக்கு முன்னர் தென்னாபிரிக்க அணியின் வீரர்களான அஸ்வர் பிரின்ஸ், ஹேர்சல் கிப்ஸ் ஆகியோரைத் தனது சுழல் பந்தினால் வெளியேற்றினார். முன்னர் சற்றுக் கூடுதலாக இருந்த தென்னாபிரிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை இந்த இருவரினதும் வீழ்ச்சியினால் மந்த நிலையை அடைந்தது. பிரின்ஸ் 61 ஓட்டங்களுடனும் கிப்ஸ் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் பலமான நிலையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த தென்னாபிரிக்க அணியின் வீரர் பௌச்சர் 85 ஓட்டங்களுடன் ஜயசூரியவின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதன் பின்னர் வந்த அன்ரூ நெல்,ஸ்ரெயின் ஆகியோரை முரளிதரன் குறுகிய நேரத்தில் வீழ்த்தினார். 10 ஆவது விக்கெட்டுக்காக நிக்கி போஜேயுடன் இணைந்து கொண்ட மக்காயா நிற்னி 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் லசிந்த மலிங்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். நிக்கி போஜே ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 434 ஓட்டங்களைப் பெற்றது. முதல் இன்னிங்ஸில் பெறப்பட்ட 169 ஓட்டங்களையும் சேர்த்து 603 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் முதல் இன்னிங்ஸில் 756 ஓட்டங்களைப் பெற்ற இலங்கையணி இன்னிங்ஸ் மற்றும் 153 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணியை வென்றது.

இது டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இலங்கை அணி பெற்றுக்கொண்ட மூன்றாவது வெற்றியாகும்.

முதல் இன்னிங்ஸில் இலங்கையணியின் துடுப்பாட்ட வீரர்களான மஹேல ஜெயவர்த்தன 374 ஓட்டங்களையும் சங்ககார 287 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். இவர்கள்




இருவரும் இணைப்பாட்டமாக 624 ஓட்டங்களைக் குவித்து புதிய சாதனையைப் படைத்திருந்தனர். அத்துடன் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தென்னாபிரிக்காவுக்கு எதிராக தனது 96 ஆவது விக்கெட்டை இந்த டெஸ்ட் போட்டியில் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியில் ஆடட்நாயகனாக இலங்கையணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவுசெய்யப்பட்டார். (8)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டி

தென்மராட்சி, ஓக.1

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் அமரர் லயன் அ.பொ.செல்லையா நினைவாக தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியினை விரைவில் நடத்தவுள்ளது.

பதினொரு வீரர்கள் கொண்ட அணிகளுக்கிடையில் 15 பந்து பரிமாற்ற முறையில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ளவுள்ள தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்கள் சாவகச்சேரி கண்டி வீதியில் உள்ள குகன் புகைப்படப்பிடிப்பு நிலையத்தில் பதிவுசெய்யுமாறு கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார்.

(8-117)

## சானியா ஜோடி தோல்வி

ஸ்டான்போர்ட், ஓக.1

அமெரிக்காவில் உள்ள ஸ்டான்போர்ட்டில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் ரெனிஸ் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்ஷா அமெரிக்காவின் பெத்தானி மாட்டெனக் ஜோடி தோல்வியைத் தழுவியது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இத்தாலியின் மரியா எலீனா காமரின், ஆர்ஜென்ரீனாவின் ஜிசெலா துல்கோ ஜோடியுடன் விளையாடியது. இந்திய - அமெரிக்க ஜோடி அதில் 6:4, 6:3 என்ற நேர் செற்கணக்கில் இந்திய ஜோடி தோல்வியைத் தழுவியது.

விளையாட்டு

## ருவென்ரி-20 போட்டிக்கு கிரிக்கெட் சபை அங்கீகாரம்

லண்டன்,ஓக.1

ருவென்ரி- 20 போட்டிக்கு சர்வதேச கிரிக்கெட்சபை (ஐ.சி.சி) முறைப்படி அங்கீகாரம் அளித்துள்ளது.

டெஸ்ட் ஒரு நாள் ஆட்டங்கள் மீதான ஆர்வம் குறைய 20 ஓவர்கள் கொண்ட ருவென்ரி-20 ஆட்டத்தை இங்கிலாந்து அறிமுகப்படுத்தியது. இந்த வகை அதிரடி ஆட்டத்திற்கு உலகம் முழுவதும் அமோக ஆதரவு காணப்பட இந்திய கிரிக்கெட் சபையும் வேறுவழியின்றி ருவென்ரி/20 ஆட்டத்தை ஏற்றுக் கொண்டது.

சமீபத்தில் லண்டனில் நடந்த ஐ.சி.சி கூட்டத்தில் ருவென்ரி/20 ஆட்டத்துக்கு அனுமதி அளிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. இது தொடர்பாக ஐ.சி.சி டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகள், உறுப்பு நாடுகளின் உறுப்பினர்கள் மற்றும் கிரிக்கெட் புள்ளிவிவர நிபுணர்கள், வரலாற்று ஆசிரியர் சங்கத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. பின்னர் ருவென்ரி-20 ஆட்டத்தை கிரிக்கெட்டின் அதிகாரப் பூர்வ ஆட்டமாக அங்கீகரிக்க ஐ.சி.சி முடிவு செய்தது. இதைத் தவிர பல்வேறு முக்கிய அறிவிப்புகளும் வெளியாகின.

இதன்படி ஐ.சி.சி உறுப்பு நாடுகள் இடம் பெற்றுள்ள சிறந்த 6 அணிகளுக்கு ஒரு நாள் ஆட்டத்துக்கான அந்தஸ்து வழங்கப்படுகிறது. 3 நாள்களுக்கு குறைவாகவோ அல்லது அணிக்கு 11 பேருக்கு குறைவாக ஆடினால் அந்த ஆட்டங்களிற்கு முதல் தர அந்தஸ்து வழங்கப்பட மாட்டாது. 'ஏ' அணிகளுக்கு இடையே நடக்கும் 50ஓவர் ஆட்டங்களுக்கு அனுமதி தரப்பட்டது. இந்த போட்டிகளின் சாதனைகளை கிரிக்கெட் புள்ளிவிவர நிபுணர்கள், வரலாற்று ஆசிரியர் சங்கம் பதிவுசெய்யும். இது குறித்து ஐ.சி.சி பொது மேலாளர் டேவிட் ரிச்சர்ட்சன் கூறுகையில்:-

அதிகாரப்பூர்வ அந்தஸ்து பெற்ற ஆட்டங்களைப் பல்வேறு வகையாக பிரிப்பதுவும் அவசியம். இதனால் கிரிக்கெட் புள்ளிவிவரங்களை தொகுப்பவர்கள் பெரிதும் பயனடைவர் என்றார்.



வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இந்த அணியினர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஆகியோருடன் நிற்பதைப் படத்தில் காணலாம். *(படம்: தமிழினியன்)*

## ஊக்க மருந்துச் சர்ச்சையில் காட்லின்! வாழ்நாள் தடைவிதிக்கப்படும் அபாயம்!!



ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கியுள்ள ஒலிம்பிக் சம்பியன் ஜஸ்ரின் காட்லினுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மின்னல் வேக ஓட்டப்பந்தய வீரர் ஜஸ்ரின் காட்லின், 100 மீற்றர் ஓட்டத்தில் 2004 ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். மேலும் உலக சம்பியன்ஷிப் ஆட்டங் ரில் தங்கம் வென்று, நடப்பு சம்பியனாக வலம் ட நகிறார். இந்த ஆண்டுகட்டாரில் நடந்த ஆட்டங்களில் 100 மீற்றர் தூரத்தை 9.77 வினாடிகளில் கடந்து, ஜமைக்காவில் பாவெலுடன் உலக சாதனையைப் பகிர்ந்து கொண்டார்.

இவர் சமீபத்தில் அளித்த பேட்டியில், ''கான்சாஸ் தடகள போட்டியின் போது ஊக்கமருந்து சோதனையில் சிக்கித்தொண்டதாக தெரிவித்திருந்தார். இதற்கு முன்பு அவர் கடந்த 2001 இல் அமெரிக்க ஜூனியர் சம்பியன்ஷிப் ஆட்டங்களிலும் ஊக்கமருந்து எடுத்துக் கொண்டது தெரிய வந்தது. அவருக்கு கொடுக்கப்பட்ட மாத்திரைகளில் 'அம்படைமன்' கலந்திருந்தது. இது மருந்து பொருள் என்பதால் இரண்டாண்டு தடையில் இருந்து தப்பினார். தற்போது மீண்டும் ஒருமுறை அவர் 'டெஸ்டோஸ்டிரோன்' என்ற ஊக்கமருந்தை எடுத்துக்கொண்டது தெரிய வந்துள்ளது. சர்வதேச தடகள கூட்டமைப்பு விதிகளின் படி ஒரு வீரர் இருமுறை ஊக்கமருந்து உட்கொண்டது உறுதி செய்யப்பட்டால், அவருக்கு வாழ்நாள் தடை விதிக்கலாம்.

இது பற்றி சர்வதேச தடகள கூட்டமைப்பு தலைவர் லெமய்ண்ட் டயாக் கூறுகையில்:- ''உலகின் முன்னணி வீரர்களில் ஒருவரான காட்லின் இது போன்று சிக்கியுள்ளது மிகுந்த வருத்தமளிக்கின்றது. ஆட்டங்களிலிருந்து ஊக்கமருந்தை முழுவதுமாக நீக்குவதே எங்களது நோக்கம். இவ்வழக்கில் அமெரிக்க ஊக்கமருந்து தடுப்பு அமைப்பின் முன்பு காட்லின் ஆஜராக உள்ளார். இவ்விசாரணை விரைவில் தொடங்கும்'' - என்றார்.

இதை காட்லின் பயிற்சியாளர் டிரிவர் கிரகாம் அடியோடு மறுத்துள்ளார். அவர் கூறுகையில்:- ''காட்லினின் புகழுக்கு களங்கம் விளைவிக்க வேண்டும் எனச் சிலர்திட்டமிட்டு இதில் ஈடுபட்டுள்ளனர். அவர் குற்றமற்றவர்'' - என்றார்.

சமீபத்தில் பிரான்ஸில் நடந்த 'டூர் டி பிரான்ஸ்' சைக்கிள் பந்தயத்தில் சம்பியன் பட்டம் வென்ற பிளாய்ட் லாண்டிஸ் ஊக்கமருந்து எடுத்துக் கொண்ட சர்ச்சை முடிவடையாத நிலையில், தற்போது காட்லினும் இது போன்று மாட்டிக்கொண்டுள்ளதால் அமெரிக்க விளையாட்டுத்துறை அதிகாரிகள் மிகுந்த வருத்தத்தில்ஆழ்ந்துள்ளனர்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட்

## போட்டிகளைக் கண்டுகளிக்க அதிபர் முஷாரப் ஆர்வம்



கராச்சி, ஓக.1

எதிர்வரும் 2007 இல் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டங்களின் அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்களைக் காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஆர்வமாக உள்ளார்.

பாகிஸ்தானின் அதிபரான முஷாரப் தீவிர கிரிக்கெட் ரசிகரும் கூட. நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஆட்டங்களைக் காணத் தவறவேமாட்டார். சமீபத்தில் இந்திய அணியின் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் இரண்டு ஒருநாள் ஆட்டங்களைக் கண்டுகளித்ததோடு மட்டுமல்லாமல் லாகூரில் நடந்த ஆட்டத்தின் பரிசளிப்பு விழாவிலும் கலந்துகொண்டார்.

இவர் மேற்கிந்தியத் தீவுகளில் நடக்கவுள்ள உலகக் கிண்ண ஆட்டங்களின் அரையிறுதி, இறுதியாட்டங்களைக் காணவிருப்பம் தெரிவித்துள்ளார். இது பற்றி தொடரின் அமைப்பாளர்களில் ஒருவர் கூறுகையில்:-''அரையிறுதி, இறுயாட்டங்களைக் காண முஷாரப் ஆர்வமாக உள்ளதாக அவரது பிரதிநிதி எங்களிடம் தெரிவித்துள்ளார். தற்போது போட்டிகளைக்காண விருப்பம் தெரிவித்துள்ள முதல் தலைவர் இவர்தான்.'' - என்றார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 | | 02 |
| 05 | | 07 |
| 1931 | | 2006 |



### அமரர் இராமர் கந்தையா

2.07.2006 அன்று சிவபதமெய்திய எங்கள் குடும்பத் தலைவர் அமரர் இராமர் கந்தையா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.08.2006) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் தெற்கு,
கட்டப்பிராய். (52842)

சிவனேஸ்வரன்
(சிவா- மகன்)

## புலிகளிடம் இரு ஸ்கை மாஸ்டர் ரக விமானங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் செஸ்னா ஸ்கை மாஸ்டர் வகையைச் சேர்ந்த மேலும் இரண்டு இலகுரக விமானங்கள் இருப்பதாக இந்திய புலனாய்வுத்துறையின் ஊடாக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு நாளேடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இரண்டு விமானங்களும் இரண்டு தடவை வானில் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு தடவை வவுனியா விமானப் படைத்தளத்தில் உள்ள ராடரில் பதிவாகியிருப்பதாக கூறப்படுகிறது.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட இந்திரா எனும் ராடர் கருவிகள் வடமத்திய மாகாணத்தில் பொருத்தப்பட்டிருப்பதனால் விடுதலைப்புலிகளின் விமானப் படை பிரிவு பற்றிய தகவல்களை கண்டறியக்கூடியதாக உள்ளதாகவும் அந்த நாளேட்டின் செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## நெஞ்சை விட்டு நீங்காத முதலாம் ஆண்டில்...

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 04 | | 12 |
| 04 | | 08 |
| 1943 | | 2005 |



### அமரர் செல்லத்தம்பி தெட்சணாமூர்த்தி


(மண்டைதீவு)
திதி: சப்தமி

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம்இதயம்
வாழந்திடும் காலமெல்லாம்
மறப்போமா உம் முகத்தை?
வருந்தி நாம் அழைக்கின்றோம்
திரும்ப வந்து சேர்ந்திடுவீர்!

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (52840)

உம் நினைவுகளுடன் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்கள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### ஆறுமுகம் துரைராஜசிங்கம்

(துரை)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14.07.1960 | 02.07.2006 |

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [01.08.2006] செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கொம்மாந்தறை,
உடுப்பிட்டி வடக்கு,
வல்வெட்டித்துறை. (52838)

தகவல்:
தாய், சகோதரர்கள்.

## தென்மராட்சி வலய முன்பள்ளி ஆசிரியருக்கு கலந்துரையாடல்

சாவகச்சேரி, ஓக.1

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நாளை புதன்கிழமை 1.30 மணியளவில் இடம்பெறும் என்று பதில் கல்விப்பணிப்பாளர் சு.பாக்கியராஜா அறிவித்துள்ளார். ஆசிரியர்களைத் தமது குடும்பஅட்டையுடனும், விளையாட்டுப் போட்டி விண்ணப்பங்களுடனும் வருமாறும் அவர் கேட்டுள்ளார். (ம-31)

## வரணியில் நெற்காணிகளின் விவரங்கள் திரட்ட நடவடிக்கை

வரணி இடைக்குறிச்சி கிராமத்தில் உள்ள வயற்காணிகளின் விவரங்கள் உள்ளடக்கி நெற்காணி இடாப்புகள் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று இப்பகுதி விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்தார்.

இப்பகுதிக்குட்பட்ட வயற் காணிகளின் உரிமையாளர்கள் புலம் பெயர்ந்தும், வேறு பிரதேசங்களில் வசிப்பதால் பல காணிகள் செய்கை பண்ணப்படாது உள்ளன. அது மட்டுமின்றி செய்கை பண்ணப்படும் வயற்காணிகளின் உரிமையாளர்களுக்கு உரிய மானியங்கள் கிடைப்பதில்லை.

இவற்றைக் கருத்திற்கொண்டு வயற்காணிகளின் பதிவை பேணும் இடாப்புகள் தயாரிக்கப்படவுள்ளன. இதன் மூலம் விவசாயம் மேற்கொள்பவர்கள் உரமானியம் மற்றும் காப்பீடுகளை பெற விண்ணப்பிக்க முடியும்.

இப்பகுதிக்குட்பட்ட வயற்காணிகளை உடையவர்கள் தகுந்த காணி குறித்த பதிவுகளை மேற்கொள்ளுமாறு சம்மேளனத் தலைவர் கேட்டுள்ளார். (204-122)

## சிரமதானம் மூலம் குளம் புனரமைப்பு

தென்மராட்சி,ஓக.1

வரணி மாசேரிப் பகுதியில் உள்ள விக்கிரமாகுளம் அண்மையில் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டது. தற்போதைய கடும் வரட்சி காரணமாக வரணிப் பிரதேசத்தில் கால்நடைகளுக்காக முன்னோரால் அமைக்கப்பட்ட பல குளங்கள் வற்றிவிட்ட இந்நிலையில் இப்பகுதி கால் நடைகளின் குடிதண்ணீர் தேவை கருதி இப்பகுதி பொதுமக்கள் ஒன்றிணைந்து இக்குளத்தைப் புனரமைப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் இப்பகுதியில் உள்ள கால் நடைகளின் குடிதண்ணீர் தேவை ஓரளவு பூர்த்திசெய்யப்பட்டுள் ளதாக கூறப்பட்டது. (ம-122)

## மரண அறிவித்தல்கள்

### மகேந்திரன் மேரிகில்டா



இல.10/1, நக்கா வீதி, சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. மகேந்திரன் மேரிகில்டா (கிளி) நேற்று (31.07.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராசா மகேந்திரனின் அன்பு மனைவியும், தம்பித்துரை-தங்கமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிராசா தேவமாணிக்கத்தின் மருமகளும் கசில்டா ராகினி, ரமேஸ் கஜேந்திரன் (I.C.R.C) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரான்லி கொன்ஸ்ரன்ரைன், ஸ்ரீபாமா (ஆசிரியை, புனித சாள்ஸ் ம.வி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரித்தன், அஸ்வின் ஆகியோரின் பெரிய தாயும், சுமாலிக்கா, வருணியா (புனித ஜோண் பொஸ்கோ ம.வி) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.10/1, நக்கா வீதி,
யாழ்ப்பாணம். (52843)

தகவல்:
ரமேஸ் கஜேந்திரன்
(சகோதரன்)

### திருமதி தளையசிங்கம் சந்திரலீலா

(மணி அன்ரி)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வருணன் அச்சுவேலியிலும், 382, கோயில் வீதி, நல்லூரிலும் நீண்டகாலம் வசித்தவருமாகிய சந்திரலீலா நேற்று (31.07.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராசையா தளையசிங்கத்தின் பாசமிகு மனைவியும், தவலீலா (கூட்டுறவு பரிசோதகர் யாழ்ப்பாணம்), தவசேகர் (ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், சூரியகுமார் (கனடா), தக்ஷாயினி (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சரஸ்வதி, சிவசிதம்பரம் O/L/D/O ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள தவசேகரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு
அருகாமை,
பிரதான வீதி,
வட்டுக்கோட்டை. (52834)

தகவல்:
இ.தளையசிங்கம் (கணவன்)
த.தவசேகர் (மகன்)
T.P: 0777036932

## 1 ஆம் வருட நினைவுகள்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 20 | | 12 |
| 02 | | 08 |
| 1937 | | 2005 |



(52833)

அமரர்
### திருமதி நேசம்மா இராசரத்தினம்

(திதி: ஆடி பூர்வபக்க சப்தமி)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறாதம்மா எங்கள் துயரம்
பாரினில் நாம் உள்ள வரை உங்கள் நினைவு
நிலைத்திருக்கும்

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

மாறாத நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(நேசம் அழகு நகை)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கந்தசாமி



நயினாதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம்- கந்தசாமி நேற்று (31.07.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்-கமலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும், சுதர்சனா, சுதர்சன், சுதாகரன், சுதர்சினி, சுமித்திரா, சுரேந்திரன், சுஜாதா, சுஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

3ம் வட்டாரம்,
நயினாதீவு. (52832)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்


**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம்ரவி, திரிஷா, ஜேஜூதீ, ரிசலாசாட்டேல்

**சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்**

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-47139)

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

இன்று முதல் அர்ஜுன், சினேகா, கபாலி நடித்த

**சின்னா** (அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க)

காட்சி நேரம் : 10.30, 2.30

(சி-49180)


### தம்பிப்பிள்ளை காங்கேசு

(முன்னாள் இ.போ.ச. நடத்துநர்)



குப்பிளான், சொக்கர்வளவு பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பலாலி தெற்கு வசாவிளானை வசிப்பிடமாகவும் தற்போது கிழுவானை ஒழுங்கை கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை காங்கேசு (முன்னாள் இ.போ.ச. நடத்துநர்) அவர்கள் 28.07.2006 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - உமையவள் தம்பதியரின் ஏகபுத்திரனும் செல்வநாயகியின் பாசமிகு கணவரும் காந்தரூபி(சுவிஸ்), காலஞ்சென்ற உமாசுதன் மற்றும் உமாசிவன் (லண்டன்), செல்வரூபி (லண்டன்), சிவரூபி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகுமார் (சுவிஸ்), காந்தன் (லண்டன்), மதிவதனா ஆகியோரின் அன்பு மாமனும் சொரூபா, றஜீபன்(சுவிஸ்), விருஷன், விபூஷன், விதுரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் கனகம்மா, இராசம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிழுவானை ஒழுங்கை,
கோப்பாய். (சி-50600)

தகவல்:
மனைவி.

# நாளாந்தம் படுகொலைகளைச் சந்தித்தபடி வாழும் தமிழர்கள் விடயத்தில் மனிதாபிமானம் இல்லையா?

## கண்காணிப்புக் குழுவினரிடம் இளம்பரிதி கோரிக்கை

பளை, ஓக. 1

இராணுவ நெருக்குவாரங்களுக்குள் நாளாந்தம் படுகொலைகளைச் சந்தித்தபடி அச்சத்தின் மத்தியில் வாழும் தமிழ் மக்களின் நிலை, கண்காணிப்புக் குழுவினருக்கு மனிதாபிமானப் பிரச்சினையாகத் தெரியவில்லையா?

- இவ்வாறு காட்டமாகக் கேட்டு, கண்காணிப்புக் குழுவிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் படையினர் அப்பாவிப் பொது மக்களை அவர்களது வீடுகளிலும் தொழில் இடங்களிலும் தேடிச் சென்று படுகொலை செய்வதும், வெள்ளை வானில் கடத்திச் சென்று பின் பிணங்களாக வீசுவதுமான சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. இத்தகைய ஒவ்வொரு சம்பவம் குறித்தும் முழுமையான தரவுகளுடனும் ஆதாரங்களுடனும் தங்களுக்குச் சமர்ப்பித்திருந்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதேசமயம் படுகொலைகள் தொடர்ந்தும் அதிகரித்தே செல்கின்றன.

யாழ்.குடாநாட்டில் ஸ்ரீ லங்காப் படைகளின் ஆக்கிரமிப்பினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தற்போது இராணுவ நெருக்குவாரங்களுக்குள் சிக்கித் தவித்து வருகின்றனர். உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் எமது மக்களின் 144.15 கிலோ மீற்றர் நிலப்பரப்பை இராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது. அந்தப் பகுதிக்குள் வாழ்ந்த 26,000 குடும்பங்கள் இதனால் தமது சொந்த வாழ்விடங்களில் இருந்து வெளியேறி அவல வாழ்வு வாழ நேர்ந்துள்ளது. அந்த மக்களின் சொத்துக்களையும் வளங்களையும் படையினர் பயன்படுத்திக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் எமது மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி அவல வாழ்வு வாழ்கின்றனர். எம் மக்களின் இந்தப் பரிதாபகரமான வாழ்வு ஏன் கண்காணிப்புக் குழுவினருக்கு ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகத் தெரியவில்லை?

எமது தாயகத்தில் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் என அனைவரும் கொன்று குவிக்கப்படுகின்றனர். ஆலயத்திற்குள் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் காணாமற் போகின்றனர். தங்கள் வீடுகளில் உறங்கிக்கொண்டிருந்தவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். உண்வருந்தச் சென்றவர்கள் வழியில் மறித்துக் கொல்லப்பட்டுள்ளனர். கடலுக்குத் தொழிலுக்குச் சென்றவர்களும் தமது தொழில்களுக்குச் சென்றவர்களும் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்குக் கண்காணிப்புக் குழு ஏன் இன்னும் வழிமுறைகளைக் கண்டறியவில்லை. அவற்றை மேற்கொள்ளவில்லை.

ஒரு மனிதன் தனக்குத் தேவையான பொருள்களையும் வளங்களையும் தேடுவதும் பெறுவதும் அவனுக்குரிய உரிமை. அதை மறுத்து அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களையும் வாழ்வாதாரத்திற்குத் தேவையான கட்டுமானங்களையும் அவர்களுக்குக் கிடைக்காமல் தடுப்பது எந்தவிதத்தில் நியாயமானது? தமிழ் மக்களின் வாழ்வுரிமையை மறுக்கும் செயலை ஏன் கண்காணிப்புக் குழுவினர் மனிதாபிமானத்துடன் நோக்கவில்லை.

அரச தரப்பும் படைத் தரப்பும் இவ்வாறான அத்துமீறல்களை மேற்கொள்ளும் போதெல்லாம் அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததும். அத்துமீறல்கள் சர்வதேச ரீதியில் எடுத்துக்கூறப்படாததும் ஏன்? அவ்வாறு செய்யப்படாததால்தான் தமிழர்கள் மீது தற்போது படையினர் பெயர் சூட்டப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது.

இன்று (31-07) அதிகாலை நாகர் கோயில் பகுதியில் இருந்து பொது மக்கள் செறிந்து வாழும் வடமராட்சி கிழக்கு பகுதிகளை நோக்கிப் படையினர் நேற்று சரமாரியாகச் ஷெல் தாக்குதல்கள் நடத்தினர். இந்தத் தாக்குதலால் மக்களுக்கு உயிராபத்தும் பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

இதேபோன்றே, மனிதாபிமானம் என்ற போர்வையில் மாவிலாறு அணைக்கட்டு பிரச்சினை தேவைக்கதிகமாகவே பெரிதாக்கப்படுகின்றது. மென்மையாகப் பேசி பிரச்சினையை முறையாகத் தீர்த்துக்கொள்ளாமல் அரசு தான்தோன்றித்தனமாக நடந்து கொள்கின்றது.

தமிழ் மக்களினது, குடி தண்ணீர், நிவாரணம், இழப்பீடு, பாதுகாப்பு என்பவற்றை முற்றாக மறந்து அந்த மக்களின் அனைத்துத் தேவைகளையும் புறந்தள்ளி, தமிழ் மக்கள் மீதும் பெயர் சூட்டப்பட்ட இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருப்பது, தமிழ் இன அழிப்பிற்கான ஆரம்பம் என்றே நாம் கருத வேண்டியிருக்கும்.

அரசின் இத்தகைய செயல் முற்று முழுதாக போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் நடவடிக்கையாகவே கருதப்படும். படையினரும் பொலிஸாரும் ஒட்டுப் படைகளும் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் மக்கள் ஆத்திரமடைந்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள முயல்கிறோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

### நாகர் கோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து எதுவும் தெரியவரவில்லை.

இதேவேளை இந்தத் தாக்குதல் ஓய்ந்த சிறிது நேரத்தில் பலாலியிலிருந்து மூன்று ஹெலி கொப்டர்கள் நாகர்கோவில் படை முகாம் பகுதியில் வந்திறங்கி, சிறிது நேரத்தில் மீண்டும் பலாலி நோக்கிப் பறந்தன என்று சில இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டன.

புலிகளின் பதில் தாக்குதலில் படையினருக்கு காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் காயமடைந்த படையினரை ஏற்றிச் செல்வதற்காகவே ஹெலிகள் வந்து திரும்பின என்றும் அந்த இணையத்தளங்கள் குறிப்பிட்டிருந்தன. (க)

### மாவிலாறு படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல் வெளியிட்டன.

இந்தத் தாக்குதலுக்கான பிரதான இணைப்பாளராகவும் அவர் செயற்படுகிறார் எனவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட தளபதியான இவர் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் பின்னர் தளபதி பொன்சேகாவின் இடத்துக்குப் பதில் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் இப்போது சரத் பொன்சேகா மீண்டும் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்ட அரசு இணங்கினால் ஜே.வி.பி. கைகோர்க்கும்

## அக்கட்சி நேற்று திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு, ஓக.1

இலங்கையில் பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்ட ஜனாதிபதியும் அரசும் இணங்கினால் மாத்திரமே ஜே.வி.பி. அரசுடன் இணையும். இல்லாவிட்டால் ஜே.வி.பி. தனித்தே இயங்குமென அக்கட்சி நேற்று உறுதியாகத் தெரிவித்துவிட்டது.

ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீல.சு. கட்சி முக்கியஸ்தர்களுக்கும், ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையிலான குழுவினருக்குமிடையே நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு பேச்சுகள் ஆரம்பமாகின.

அரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புகளை ஏற்க ஜே.வி.பி. நான்கு கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. இதில் பிரதான கோரிக்கையான பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட ஜனாதிபதியும் அரசும் இணங்கினால் மாத்திரமே ஏனைய மூன்று கோரிக்கைகள் குறித்து பேச்சு நடத்தப்படுமெனவும் ஜே.வி.பி. திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டதாக அக்கட்சி வட்டாரங்கள் கூறின.

ஜே.வி.பியுடனான நேற்றைய பேச்சுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஸ்ரீல.சு.கட்சி பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜே.வி.பி. தரப்பில் அதன் தலைவர் சோமவன்ஸ சமரசிங்க, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ எம்.பி.ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

### எரிபொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது. என்று கூறப்படுகின்றது.

இந்தவிலை அதிகரிப்பு தொடர்பில்இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்திற்கும் நிதி அமைச்சிற்கும் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த இரண்டு மாதங்களிற்கு முன்னரே எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-190)

### தலையற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து பொலிஸாரிடமும் முறையிடப்பட்டது. இந்நிலையில் ஆலயம் அருகே முண்டம் ஒன்று கிடப்பதைப் பொதுமக்கள் கண்டு பிடித்தனர். அதனை அடுத்தே அது கௌதீபனின் சடலம் என அடையாளம் காணப்பட்டது.

நேற்றிரவும் அச் சடலம் தொடர்ந்து அங்கேயே கிடந்தது. இன்று காலை நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்துவார் என்று தெரிகின்றது. (ம-190-170)

### நகரில் படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படவில்லை.

எனினும், குறித்த நபர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்றும், அவரே படையினர் மீது கிரனேட்டை வீசினார் என்றும் இராணுவத் தரப்பு தெரிவித்தது. கிரனேட் வீசி விட்டுத் தப்பிச்செல்ல முயன்றபோதே படையினர் இவரை சுட்டுக்கொன்றனர் என்றும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முதலில் பெரிதாக குண்டுவெடிப்புச் சத்தமும் பின்னர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் கேட்டன என்று அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவருடையது எனத் தெரிவித்து மாலை 6.30 மணியளவில் யாழ்.பொலிஸாரால் சடலம் ஒன்று போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-190-15)

### மாவிலாறு எல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கப்பட்டது எனப் புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது முனை நகர்வும் தோற்கடிக்கப்பட்டதாகப் புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

''பல்குழல் றொக்கட் லோஞ்சர்கள், பீரங்கிகள் மற்றும் 'கிபிர்', 'மிக்' ஜெட் விமானங்களின் வான்வழிக் குண்டு வீச்சுகள் ஆகியவை சகிதம் முன்னேற முயலும் அரசுப் படைகளைத் தடுத்துப் புலிகளின் போராளிகள் தீரத்தோடு களச்சமராடி வருகின்றனர்.'' - என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

புலிகள் மேற்கொள்ளும் இந்த முறியடிப்புத் தாக்குதல்களைப் புலிகளின் திருகோணமலைத் தளபதி கேணல் சொர்ணம் வழி நடத்துகின்றார் என்றும் கூறப்பட்டது.

அதேபோல, படையினர் தரப்பில் இந்தத் தாக்குதல் நடவடிக்கையை இதுவரை பதில் இராணுத் தளபதியாகக் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சி வழி நடத்துகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

**எழிலன் கருத்து**

''வான், தரை வழித் தாக்குதல்களோடு எமது பிரதேசத்துக்குள் வலிந்து நுழையும் படையினரை எதிர்த்தே நாம் மோதி வருகின்றோம். அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தும் எத்தனத்தில் நாம் ஈடுபடவில்லை. நாம் நடத்துவது எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைப் பாதுகாக்கும் தற்காப்புப் பதில் தாக்குதல்தான்.'' - என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

* மாவிலாறு எல்லையில் நேரடி யுத்தம் தொடங்கி விட்டது என்பதை அரச பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெலவும் உறுதிப்படுத்தினார்.


இதேவேளை, இச்சமர் குறித்து இராணுவம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் 35 பேர் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னேறிய இராணுவத்தினருக்கு எதிராக புலிகள் சிறிய ஆயுதங்களையும் மோட்டார்களையும் பயன்படுத்தி தாக்கினர் என்றும் அதனால் முன்நகர்வு மிக மெதுவாகவே இருக்கின்றது என்றும் அந்த அறிக்கை மேலும் கூறியது.

இதற்கிடையே - நேற்றைய மோதலில் படையினர் தரப்பில் 15 பேர் வரையிலானோர் உயிரிழந்தனர் என்று புலிகள் ஆதரவு இணையத்தளங்கள் தெரிவித்தன. (ம-190)

SUBA(V)BEAUTY PARLOUR
மகளிர்க்கான மணப்பெண் அலங்காரம்
(HINDU & CHRISTIAN)
மேக்கப், LATEST FACIALS, HAIR STYLE, மெகந்தி, WEDDING CAKE,
கண் புருவம் சரிசெய்தல், கை, கால் பராமரிப்பு
மற்றும் பல அழகு சேவைகளுக்கும் தொடர்பு கொள்க.

MOBILE : 0776062773, 0776702539
E-MAIL : vijaisuba@yahoo.com

Systems Engineer (Network Based Syllabus) MCP MCSE MCSA
Network சார்ந்த அறிவு, Microsoft நிறுவன அதிபரின் சான்றிதழ், வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள், மேலும் பல.......
Teach by: MCSE holders
MCS Supported By UNDP/JRRP
விபரங்களுக்கு. 324, Palaly Road, Jaffna.


மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்
நல்லூர் உற்சவகாலச் சிறப்பு விற்பனை நிலையம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
(சிவன் கோயில் அருகில்)
30.07.2006 தொடக்கம் 25.08.2006 வரையும்

A/L 2008 வர்த்தகப்பிரிவு
ஆரம்பம் : 03.08.2006
Thu 4 pm
*தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
*தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
A/L 2007
Paper class Soon!
BRAIN POWER INSTITUTE
(சின்னக்கடை சந்தை அருகில்)
குருநகர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.08.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.